Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-21 03-02-2005 வியாழக்கிழமை ஓசை -351


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 விநாயகர் வீதி, மமிலிட்டி.
(சி-11253)

# சுனாமி பேரழிவு புனரமைப்பிற்கு இலங்கைக்கு 1.5பில்லியன் அமெ. டொலர் நிதி தேவை

## வட-கிழக்கிற்கே 64 வீத நிதி தேவையென உலக நிதி நிறுவனங்கள் மதிப்பீடு

(கொழும்பு)

**இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைத்து மீளக்கட்டியமைக்க சுமார் 1.5பில்லியன் (150கோடி) அமெரிக்கடொலர்கள் தேவை யெனவும், சுற்றுலாத் துறை சுற்றாடல் தவிர்ந்த ஏனைய புனரமைப்புக்கு கிழக்கிற்கு 45வீதமும், வடக்கிற்கு 19 வீதமுமாக 64வீத நிதிதேவைப்படுமெனவும், உலக நிதி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, சர்வதேச ஒத்துழைப்புகளுக் கான ஜப்பானிய வங்கி என்பன தெரிவித்துள்ளன.**

இது தொடர்பாக இந்த வங்கிகள் நேற்றுஅறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.அந்த அறிக்கையின் படி இலங்கையில் சுனாமியின் காரணமாக சுமார் ஒரு பில்லியன் டொலர் அளவிலான நட்டம் ஏற்பட்டுள்ளது. இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமானத்தில் 4.4 வீதமாகும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இதனை நிவர்த்திப்பதற்காக 2005 ஆம் ஆண்டுக்கான குறுகிய கால தேவைக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப் படுகிறது.

இந்த வங்கிகள் சமர்பித்துள்ள அறிக்கையின்படி சுனாமியின் பின்னர் சுற்றுலாத்துறை சுற்றாடல் மற்றும் விவசாயம் ஆகிய அம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு ஆளுநருடனான சந்திப்பு தமிழ்க் கூட்டமைப்பு பா.உகள் புறக்கணிப்பு

(செட்டிகுளம்)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற வடக்கு கிழக்கு ஆளுநருடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர்.

நேற்று வவுனியா அரசாங்க அதிபர் பணிமனையில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னான்டோ சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பையே வன்னி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் புறக்கணித்திருந்தனர்.

தமது பகிஸ்கரிப்பு தொடர்பாக கருத்துக் கூறிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுனாமியின் பின்னர் வெளிநாடுகளி லிருந்து கிடைத்த பெருமளவு நிதிகள் தென்னிலங்கையில் மாத்திரம் புனரமைப்புகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் எவ்வித புனரமைப்பும் இடம்பெறவில்லை எனவேதான் ஆளுநர் கூட்டிய கலந்துரையாடிலில் தாம் பங்கேற்கவில்லை என தெரிவித்தார். (32,21)

## பாதிக்கப்பட்டோரில் 30 வீதமானோருக்கே அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைத்தன

**- அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு**

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் முப்பது வீதமான மக்களுக்கே அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிடைத்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கூறிய அவர் அரசாங்கம் எதிர் பார்த்தது. போல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (32)

## சுனாமி அனர்த்த நிவாரணப் பணி தொடர்பில் ஐ.நாவின் விசேட பிரதிநிதியாக கிளின்டன்

**-இலங்கை,இந்தோனேஷிய பிரச்சினைகள் தீரவும் உதவுவார்**

சுனாமி அழிவுகளை மீளக் கட்டியெழுப்பவும், அதுகுறித்து முழுக்கவனம் செலுத்தவும் முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டனை ஐ.நா.செயலாளர் கொபி அனான் தெரிவு செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணி தொடர்பில் சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடரும் இழுபறிக்குத்தீர்வு காண உதவிபுரியவும், அனர்த்த நிவாரணப்பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்யவும் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி பில் கிளின்டன் உதவுவார் எனவும் ஐ.நா. இராஜதந்திரி ஒருவரை மேற்கோள் காட்டி ஏ.பி. நிறுவன

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தின்போது கண்டெடுக்கப்பட்ட குழந்தையை இனம் காண மரபணுப் பரிசோதனை

**-நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம்**

சுனாமி அனர்த்தத்தின்போது அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையின் பராமரிப்பிலுள்ள 4 மாத ஆண் குழந்தைக்கு உரிமை கோரும் பெற்றோரை அடையாளம் காண்பதற்கு மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி மாலை கல்முனைப் பகுதியில் அநாதரவான நிலையில் எஸ்.சிறீஸ்கந்தராஜா என்பவரால் கண்டெடுக்க்ப்பட்டு எஸ்.அழகையா என்பவர் ஊடாக இந்தக் குழந்தை கல்முனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.


(AP PHOTO)

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை கட்டடத் தொகுதியின் கூரை உடைந்து வீழ்ந்தது

**-யாழ். சுதுமலைச்சம்பவத்தில் 15 மாணவர்கள் காயம்**

(யாழ்ப்பாணம்)

யாழ். சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்தின் ஆரம்பப்பாடசாலைக் கட்டடத் தொகுதியில் உள்ள வகுப்பறை ஒன்றின் கூரைப்பகுதி உடைந்து வீழ்ந்ததில் 15 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த 15 பேரில் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.ஏனையோர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, சம்பவ நேரம் மேற்படி வகுப்பறையினுள் தரம்-3,5 வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இவ்வகுப்பறையின் கூரை வளையுடன் முறிந்து அங்குகற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் மீது விழுந்ததனாலேயே இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதேவேளை மேற்படி வகுப்பறை அமைந்துள்ள கட்டடத்தொகுதி பழமை வாய்ந்தது என்பதனால் அறையின் சுவர்களில் ஏற்பட்டுள்ள உடைவுகள் காரணமாகவே கூரை முறிந்து வீழ்ந்தது எனவும் தெரியவருகிறது.

காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் சந்திப்பு

தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களை ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.யு,என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் சார்பாக ஜேம்ஸ்ன் லெபன்ஸ், அனிசெட் டைஸ்சபா ஆகியோர் கலந்துகொண்டனர்.இச் சந்திப்பில் காவல் துறையினருடன் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாகவும், மனித உரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## சிறிலங்காவின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக கடைப்பிடிக்குக!

**-பல்வேறு அமைப்புக்களும் கோரிக்கை**

சிறிலங்காவின் சுதந்திர நாளான நாளைய தினத்தை துக்க தினமாகக் கடைப்பிடிக்கும்படி பல்வேறு பொது அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையின் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தைத் தரவில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் அனைத்து அரச கூட்டுறவு அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்கள், கல்விக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் கறுப்புக் கொடிகளைக்கட்டி மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்துமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழரது சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காது, அவர்களது தேசிய நலன்களைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை அரசு சுதந்திரதினக் கொண்டாட்டங்களை நடத்த முற்படுவது கேலிக்குரியதே! இந்த சுதந்திர நாள் தமிழினத்துக்குக் கரிநாளாகும். நாளைய சுதந்திர தினத்தை வழமைபோல் தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். இந்நாளைக் கறுப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பொய்கை

சகலவிதமான கணினி வேலைகளும் விரைவாகச் செய்து கொடுக்கப்படும். அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை, கனகபுரம் தெரு,கிளிநொச்சி.

(5627)

### தவறிவிட்டது

இராஜேந்திரம், கௌசல்யா 154 ஆம்கட்டைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் தேசிய அடையாளஅட்டையும், நிரந்தரப்பயண அனுமதி அட்டையும், அடங்கிய பெண்கள், கைப்பேஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகவல் கீத்தன்.

(5628)


## தடுப்புச் சுவர் இல்லை

(கிளிநொச்சி)

திருவையாறு வின்சன் வீதியில் உள்ளபாலம் ஒன்று தடுப்புச் சுவர் இன்மையால், இரவு வேளையில் இப்பாலம் ஊடாகப் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

வில்சன் வீதி-திருவையாறு,1 ஆம் பகுதியைஇணைக்கும் வகையில் இப்பாலம் அமைந்துள்ளது. (15)


## பாடசாலை வளர்ச்சியில் பெற்றாரின் பங்களிப்பு

கிளி/கிளிநொச்சி ம.வி.யில்அழகானஆசிரியர் ஓய்வறை (STAFF ROOM) அமைத்து, தமது பங்களிப்பை வழங்கிய கரடிப்போக்கு ஜெகம் நகையக உரிமையாளர் திரு.இ.கமலநாதன் குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆசிரியர் ஒன்றியம்,
கிளி/கிளிநொச்சி ம.வி.

(5631)


-உருத்திரபுரம் சூழாவடி-

# விமானக் குண்டு வீச்சுக்கு பலியான பொதுமக்களின் நினைவு நாள் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி யன்று சிறிலங்காவின் சுதந்திர தினமன்று சிறிலங்கா விமானப் படைக் குண்டுவீச்சில் உருத்திரபுரம் சூழாவடியில் பலியான அப்பாவிப் பொது மக்களின் 14 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நடைபெறவுள்ளது.

சம்பவ இடத்தில் அமைக்கப் பெற்ற நினைவுத் தூபியில் நாளை காலை 9.00 மணிக்கு நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி உருத்திரபுரம் தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டின் பெயரில் மேற்படி நினைவு நாள் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## கண்டெடுப்பு

ஸ்கந்தபுரம் அக்கராயன் குளத்தைச் சேர்ந்த பார்வதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முல்லை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே வேளை செம்மலை அளம்பிலைச் சேர்ந்த விஜயகுமார் மதிவதனன் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு புதுக் குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும். (08)

## 'அமுதம்' தேட்டக்கணக்கு சிறப்புப் பரிசிலுக்கு தெரிவு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ வைப்பகத்தினால் சிறார்களுக்கென அறிமுகம் செய்யப்பெற்று நடைமுறைப்படுத்தப் பெற்றுவரும் "அமுதம்" சிறுவர்களிற்கான தேட்டக் கணக்கிற்கு குறிப்பிட்ட தொகை எல்லையினை அடையும் போது உடனுக்குடன் அவர்களுக்கு பரிசில் வழங்கப்பெற்று வருகின்றது.

அத்துடன் மேற்படி அமுதம் தேட்டக்கணக்கில் இணைந்துள்ளவர்களுக்கு ஆண்டு தோறும் சகல தமிழீழவைப்பகக் கிளையிருந்து ஒருவர் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பெற்று சிறப்புப் பரிசும் வழங்கப்பெற்றுவருகின்றது.

அந்த வகையில் 2004 ஆம் ஆண்டிற்கான சிறப்புப் பரிசிற்குரியவராக முல்லைத்தீவுக் கிளையில் அமுதம் சேமிப்புக் கணக்கினை சிறப்பாகப் பேணி வருகின்ற கஜேந்திரன் தமிழினியன் மதுராஞ்சன் தெரிவு செய்யப்பெற்றுள்ளாரென தமிழீழவைப்பக நடுவப்பணியக ஆளுகைப்பகுதி மேலாளர் தெரிவித்துள்ளார்.

(சோ)


### யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
### இராமநாதன் நுண்கலைக் கழகப் பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்

மேற்படி மாணவர்களுக்கான முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 24.02.2005 தொடக்கம் நடைபெறவுள்ளது.

அத்துடன் கடந்த டிசெம்பர் மாதத்தில் இடம் பெற்ற கடற்கோள் காரணமாக தடைப்பட்ட இசை, நடன செய்முறைப் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

**இசை -**

முதலாம் வருடமுதலாம் அரையாண்டு (செய்முறை – மீள்பரீட்சைகள்)
10.02.2005 – AMU-1101

முதலாம்வருட இரண்டாம் அரையாண்டு (செய்முறை)
11.02.2005 – AMU-1201

**நடனம் -**

முதலாம்வருட இரண்டாம் அரையாண்டு (செய்முறை)
08.02.2005, 09.02.2005 – ADN-1204

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு (செய்முறை)
15.02.2005, 16.02.2005 – ADN-1204

துணைவேந்தர்,
01.02.2005.

(சி.11306)





(சி-11308)

# சார்க் உச்சிமாநாடு மீண்டும் ஒத்திவைப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரில் இவ் வார இறுதியில் ஆரம்பமாகவிருந்த தெற்காசிய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு பிற்போடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தகவல துறை அமைச்சர் சேகுரஷீத் அகமத் இதனைத் தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் தலைமைப் பொறுப்பு தற்போது பாகிஸ்தான் வசம் உள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இம் மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என இந்தியா அறிவித்ததைத் தொடர்ந்து சார்க் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேபாளத்தில் உள்ள அரசியல் நெருக்கடி பங்களாதேஷின் பாதுகாப்புப் பிரச்சினை என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்தியப் பிரதமர் கலந்து கொள்ள மாட்டார் என முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேபாள மன்னர் ஞானேந்திரா இம் மாநாட்டில் கலந்து கொள்வார் என ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது.

பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த நாடு தழுவிய வேலை நிறுத்தத்தையும் பொருட்படுத்தாது இம் மாநாடு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. நேபாள மன்னர் அரசைக் கலைத்து விட்டு சகல பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து டாக்காவில் இடம்பெற வுள்ள சார்க் உச்சி மாநாட்டில் நேபாளத்தின் சார்பாக யார்? கலந்து கொள்வது என்ற பிரச்சினை ஏற்கனவே எழுப்பப்பட்டுள்ளது. சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளினதும் தலைவர்கள் அல்லது அரச தலைவர்கள் கலந்து கொண்டால் மட்டுமே உச்சி மாநாட்டை நடத்த முடியுமென சார்க் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஒஸ்ரியாவில் சால்ஸ் பேர்க் பிராந்தியத்தில் ஏற்பட்ட பனியினால் மூடப்பட்ட தமது வாகனத்தைத் தேடும் இரு ஒஸ்ரியர்கள் (நேற்று இங்கு மூன்று அடிக்கு மேல் பனி உறைந்து கானப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# ஈக்குவடோரில் 11 நாட்களில் 320 முறை நில நடுக்கம்

(குயிட்டோ)

தென் அமெரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள ஈக்குவடோர் நாட்டில் கடந்த 11 நாட்களாகத் தொடர்ந்து நில நடுக்கம் ஏற்பட்டு வருகிறது. கடந்த சனவரி மாதம் 20 ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் வரையில் 320 முறை நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 4.2 புள்ளியாகப் பதிவானது.

இதனால் பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. என்றாலும் கடலோரப் பகுதி மக்கள் பெரிதும் பதற்றத்துக்குள்ளாகி இருக்கிறார்கள்.. இது குறித்து நிபுணர்கள் கூறுகையில் , “இது சாதாரண விஷயம் அல்ல. இந்த பகுதியில் பெரிய பூகம்பம் ஏற்படலாம் அது மிகப்பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தப் போகிறது” என்று தெரிவித்துள்ளார்கள்.

# விமான நிறுவனங்களுக்கு ரூ 3.15 லட்சம் கோடி இழப்பு

சர்வதேச அளவில் விமான நிறுவனங்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் 3 லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. விமானப் பயணிகளின் வருகை குறைந்ததே இதற்கு முக்கிய காரணம்.

அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடம் மீது தீவிரவாதிகள் விமானத் தாக்குதல் நடத்தியது., ஆசிய நாடுகளில் ‘சார்ஸ்’ நோய் பரவியது ஆகியவையே பயணிகள் வருகை குறைந்ததற்கான முக்கிய காரணங்கள்.ஆகும்

# சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் மனித உரிமை மீறல் திட்டமிட்ட வகையில் அரச படைகளால் முன்னெடுப்பு

## -ஐ.நா. சபை அறிக்கையில் கண்டனம்

**சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் அந்நாட்டு இராணுவம் திட்டமிட்ட வகையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.**

இந்த மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இன மோதல்கள் காரணமாக இதுவரை 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2 மில்லியனுக்கும் அதிகமானோர் தமது வீடுகளைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையால் மேற்கொள்ளப் படும் விசாரணைகளின்போது இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை டார்பூர் பிராந்திய வன்செயலுக்காக சிறப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

நிவாரணத்திற்காக தவமிருக்கும் டார்பூர் பிராந்திய மக்கள்





பஸ்ராவிலுள்ள பிரபல உணவு விடுதி மீது இலக்கு வைத்துக் காத்திருக்கும் ஈராக்கியப் பொலிசார்.

# சட்ட விரோத வெளிநாட்டவரை அகற்றும் நடவடிக்கை மலேசிய அரசால் நிறுத்தம்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதை அந்நாட்டு அரசு திடீரென ஒத்தி வைத்துள்ளது. மலேசியாவில் இருந்து வெளியாகும் ‘நியூ ஸ்ட்ரெய்ட்ஸ்டைம்ஸ்’ பத்திரிகையில் இது தொடர்பாக கூறப்பட்டுள்ளதாவது : மலேசியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங்கு 12இலட்சம் பேர் சட்ட விரோதமாகத் தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள். இப்படி சட்ட விரோதமாகத் தங்கியிருப்பவர்கள் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும். இல்லையெனில் கடும் நடவடிக்கைகளைச் சந்திக்க நேரிடுமமென மலேசிய அரசு அறிவித்தது. இந்தப்பொது மன்னிப்பைப் பயன் படுத்தி மூன்று இலட்சம் பேர் வெளியேறி விட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி தாக்குதல் ஏற்பட்டதால் இந்தக்காலக்கெடு கடந்த சனவரி மாதம் 31ஆம் திகதியாக நீடிக்கப் பட்டது. அதனால் பொது மன்னிப் புக் காலத்தை தாண்டி தங்கியிருப் பவர்களை வெளியேற்ற மலேசிய அரசு நேற்று முன்தினம் முதல் அதிரடி நவடிக்கை எடுக்கலாமென எதிர் பார்க்கப்பட்டது ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.தங்கள் நாட்டவர்களை வெளியேற்றுவதை சில காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டுமென மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமது பதவியை இந்தோனேசிய அதிபர் சுசிலோ பாம்பாங் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது. அதனால் நடவடிக்கை எடுப்பதை மலேசிய அரசு நிறுத்திவைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஈராக் சிறைச்சாலையில் திடீர் கலவரம் இராணுவத்தின் தாக்குதலில் 4 கைதிகள் பலி!

(பாக்தாத்)

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள முகாமில் 5 ஆயிரத்துக்கும் மேறபட்ட கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் வழக்கம் போல சோதனை நடத்துவதற்காக அமெரிக்க இராணுவத்தினர் சென்றனர். அப்போது கைதிகள் திடீர் கலவரத்தில் ஈடுபட்டனர். இராணுவத்தினரை நோக்கி பெரியகற்களையும், கைகளில் கிடைத்த ஆயுதங்களையும் வீசி தாக்குதல் நடத்தினார் கள்.

இராணுவத்தினர் கடும் எச்சரிக்கை விடுத்தும் கலவரம் அடங்கவில்லை. சுமார் 45 நிமிட நேரம் வன்முறைச் சம்பவங்கள் நீடித்தன. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்கள்.

இதில் 4 கைதிகள் இறந்தனர் இராணுவத்தினர் உட்பட 6 பேர் காயமடைந்தனர் இவர்களில் பலத்த காயமடைந்த 4 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஈராக்கில் தேர்தல் நடைபெற்று முடிந்த 2 நாட்களில் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஆனால் தேர்தலுக்கும், இந்த சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று உயர் இராணுவ அதிகாரி கூறினார்.

# அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் விரைவில் சீனா பயணம்

கடந்த 2001 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்கா- சீனா இடையே பல் வேறு துறைகளில் நல்லுறவு ஏற்பட்டு வருகிறது. இந்த முன்னேற்றத்தின் எதிரொலியாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் சீனாவுக்குச் செல்ல இருக்கிறார். இந்த ஆண்டுக்குள் அவர் சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். ஆனாலும் அவரது சுற்றுப் பயண விபரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அதற்கிடையில் இரு நாட்டு அதிகாரிகள் இடையே பேசி இது பற்றி முடிவு செய்ய இருக்கிறார்கள்.




இந்தோனேசியாவில் பண்டா ஆசே மாநிலத்தில் சுனாமியால் இடம் பெயர்ந்து அநாதரவான நிலையில் இராணுவ வைத்தியசாலையில் பிள்ளையைப் பிரசவித்த தாயுடன் உரையாடும் அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவாட்.

# எரிபந்த நோய், கபில நிறத்தத்தியின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஒட்டு மொத்த தடுப்பு முறை தேவை

(கிளிநொச்சி)

**வன்னிப் பகுதி நெல் வயல்களில் எரிபந்த நோயும், கபில நிறத் தத்தியின் தாக்கமும் பெருமளவில் நெற்செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.இதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் உடன் நடவடிக்கையில் ஈடுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.**




ஒட்டுசுட்டான் கனகராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள நெல் வயல்களில் கபில நிறத்தத்திகளின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதன் தாக்கம் பயிரின் விளைவுப் பருவத்திலேயே கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

தாய்ப் பூச்சியும், அணங்குப் பருவமும் (குஞ்சுகள்) நெற்பயிரின் அடித்தண்டுப் பகுதியில் இருந்து சாற்றை உறிஞ்சுவதனால் பயிர் ஆரம்பத்தில் மஞ்சள் நிறமாகி பின் கருகி விடும். ஆரம்பத்தில் இதன் தாக்கம் ஓரிரு பயிர்களில் காணப்படும். இறுதியில் தாக்கத்திற்குள்ளான பயிர் முற்று முழுதாக எரிந்து காணப்படும். இது தத்தி எரிவு எனப்படும்.

தாய்ப்பூச்சி மண்ணிறத்தில் இருக்கும், பெண் பூச்சி 200 முட்டைகள் வரை இலை மற்றும் இலை மடல்களின் மேல் இரண்டு வரிசையில் இடும். இந்த முட்டை வெள்ளை நிறத்தில் சிறியதாக இருக்கும். 10 நாட்கள் கழித்து முட்டைகளிலிருந்து மங்கலான வெள்ளை நிற அணங்குகள் (குஞ்சுகள்) வெளி வரும். இவை இறக்கை இல்லாமல் இருக்கும். இவற்றின் நீளம் 3 மில்லி மீற்றர் அளவே ஆகும். நாளடைவில் இறக்கைகள் வளரும். 12-18 நாட்கள் கழித்து தாய்ப் பூச்சியாக மாறி விடும்.

இந் நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு சில விவசாயிகள் தடுப்பு முறைகளை மேற் கொண்டாலும், அனைத்து விவசாயிகளினதும் ஒட்டு மொத்த தடுப்பு முறையின் மூலமே இந் நோய்த் தாக்கத்தினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்.

இந் நோய்த் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு குளத்தின் கீழ் உள்ள சகல விவசாயிகளும் வயலில் உள்ள நீரை முற்றாக வெளியேற்றி ஓரிரு தினங்களில் ஒரே நேரத்தில் வீ.பி.எம்.சி, அட்மயர் போன்ற பூச்சி நாசினிகளில் ஏதாவது ஒன்றை நெற்பயிரின் தண்டின் அடிப்பகுதிக்கு சிபார்சின் படி விசிறவும். இந் நோய்த் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த முடியும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். இதே வேளை இந் நோய்த் தாக்கம் தொடர்பான மேலதிக விபரங்களை விவசாய போதனாசிரியர்களை அல்லது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களைத் தொடர்பு கொண்டு கேட்டுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.(15)

# கிளி.மத்திய கல்லூரியில் ஆண்டு ஒன்று புகுமுக விழா



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆண்டு ஒன்று மாணவர்களின் புகுமுக விழாவின் போது. (படம்- வரன்)

# கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணியை முடுக்கிவிட்டுள்ள கரைச்சி பி.சபை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இதனடிப்படையில் இன்று தருமபுரம் பகுதியிலும் 5ஆம், 6ஆம் திகதிகளில் அக்கராயன் பகுதிகளிலும் 7ஆம், 8ஆம் திகதிகளில் கண்டாவளைப் பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும் நடவடிக்கைகள மேற்கொள்ளப்படவுள்ளதென கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தெரிவித்துள்ளார்.

(சோ)

# பிர.செயலர்களின் சுமையைக் குறைக்க உ.பிர.செயலர்களை நியமிக்கக் கோரல்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உதவியாக ஓய்வு பெற்ற உதவிப் பிரதேச செயலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சின் செயலாளருக்கு அவசர தொலை நகல் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

காரைதீவு, ஆலையடிவேம்பு, திருக்கோவில் பிரதேச செயலாளர்களின் வேலைப்பழு அதிகரித்துள்ளது. இவர்களுக்குத் துணையாக இப் பிரதேச செயலகங்களில் ஓய்வு பெற்ற உதவிப் பிரதேச செயலாளர்களை நியமிக்க நடவடிக்கையெடுக்குமாறு கோரியே தொலைநகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ மருத்துவ போராளிகளுடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய மருத்துவக் குழு சேவை

மட்டு. அம்பாறை தமிழீழ மருத்துவத்துறையின் அழைப்பின் பேரில் வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான கச்சக்கொடி சுவாமிமலை, 40ஆம் கொலனி ஆகிய இடங்களில் இம் மருத்துவக் குழுவினர் வைத்திய முகாமை நடத்தினர். இக்குழு பின்னர் பழுகாமம் காந்தரூபன் அறிவுச்சோலைக்குச் சென்று பத்தாயிரம் ரூபாவினை அன்பளிப்பு செய்ததுடன், நேற்று முன்தினம் பிற்பகல் கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லத்திற்கு சென்ற குழுவினர் அங்குள்ள சிறார்களுக்கு உதவி செய்தனர். இதேவேளை பல வறிய குடும்பங்களுக்கு குழந்தைகளுக்கான உலர் உணவு, ஆடைகள், நுளம்பு வலைகள் என்பன அன்பளிப்பாகவும் வழங்கப்பட்டன. இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவக் குழுவினருடன் மட்டு. அம்பாறை மருத்துவக் குழுவினராகிய மட்டு. அம்பாறை மருத்துவப் பொறுப்பாளர் ரவிமோகன், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் தமிழ் வேணி உட்பட மருத்துவ போராளிகளான உதயராஜ், அன்பு, தணிகை, மீனாழன் உள்ளிட்டோர் இணைந்து இச் சேவைகளை வழங்கினர். அத்துடன் மட்டு. அம்பாறை மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர் குவேனி, மாவடி முன்மாரிக் கோட்ட துணைத் தளபதி யோகராஜ ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த மருத்துவக் குழுவின் சேவைக்கு முன்பாக கரடியனாறு, திக்கோடை போன்ற பகுதிகளில் வேறு ஒரு வெளிநாட்டுக் குழுவினரும் தமிழீழ மருத்துவக் குழுவின் அழைப்பின் பேரில் வருகை தந்து மருத்துவ உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வருட இறுதிக்குள் இல. அரசியலில் பாரியதிருப்பம் ஏற்படலாம்

-தெற்காசிய விவகாரங்களுக்கான ஆய்வாளர் தெரிவிப்பு

இலங்கை அரசியலில் இந்த வருட இறுதிக்குள் பாரிய அரசியல் மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தென் கிழக்காசிய விவகாரங்களுக்கான ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பின் வர்த்தக மையங்களையும் அரசியலையும் இந்தியா ஆக்கிரமித்துள்ள நிலையிலும் எதிர்காலத்தில் இலங்கையின் அரசியலையும் தேர்தலையும் இந்தியா தீர்மானிக்கும் நிலையில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இராஜதந்திரக்குழுவினர் நோர்வே சென்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய நாடுகளின் நன்கொடைகளையும் நிதிகளையும் முடக்கும் வேலைகளில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருவதுடன், இந்த வருடத்திற்குள் ஆட்சி கவிழும் நிலையுள்ளதாகவும் அவர் ஆருடம் கூறியுள்ளார். அமெரிக்காவில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இராஜதந்திர நகர்வுகள் மேற்கொள்ளப்படும் போது சந்திரிகா அம்மையாரால் அயல் நாட்டின் ஆதரவுடன் ஆட்சி கவிழ்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வான்-பாரஊர்தி நேருக்கு நேர் மோதின ஐவர் பலி; ஒன்பது பேர் காயம்

(கொழும்பு)

கொஸ்கொட காலி வீதியின் நகே பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

அதிகாலை 2.45 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்றும் காலி நோக்கி சென்று கொண்டிருந்த பாரஊர்தி ஒன்றும் மோதியதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பல்லப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# விவசாயம் தவிர்ந்த ஏனைய முயற்சிக்கு கி.அபி. வங்கியால் 35 இலட். ரூபா கடன்

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கடந்த வருடம் சுயதொழில் முயற்சி, தொழில்துறை மேம்பாடு ,சூரிய மின்கலம் மற்றும் ஏனைய கொள் முதல்களுக்கென 122 பயனாளிகளுக்கு 33,84,507 ரூபாவினை கடனாக வழங்கியுள்ளது..

சுயதொழில் கடனாக 77 பயனாளிகளுக்கு 1517880 ரூபாவினையும், தொழில் துறை மேம்பாட்டுக் கடனாக 9 பயனாளிகளுக்கு 551627 ரூபாவினையும், சூரிய மின்கலத்திற்கென 33 பயனாளிகளுக்கு 1076000 ரூபாவினையும், உழுபொறிக் கடனாக ஒரு பயனாளிக்கு 105000 ரூபாவினையும் உந்துருளி கடனாக 2 பயனாளிகளுக்கு 134000 ரூபாவினையும் கிராமிய அபிவிருத்தி வங்கி கிளைகளினூடாக வழங்கியுள்ளது. மேற்படி கிராமிய அபிவிருத்தி வங்கியினால் 2004/2005 கால போக செய்கைக்கென 940 குடும்பங்களுக்கு 14154370 ரூபாவினைக கடனாக வழங்கியிருந்தமை தெரிந்ததே. (சோ)

# ஹெக்கிராவையில் கைதானவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

ஹெக்கிராவ பிரதேசத்தில் விமானங்களைத் தாக்கக் கூடிய ரவைகளுடன் கைது செய்யப்பட்டவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஹெக்கிராவ மயிலக் கஸ்ரவ பிரதேசத்திலேயே குறிப்பிட்ட சந்தேக நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விமானங்களைத் தாக்கக் கூடிய 30 ரவைகளை சந்தேக நபரின் வீட்டிலிருந்து பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்த ரவைகள் எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டது என்பது குறித்து ஆராயும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால் பெருவிரல்களை கயிற்றால் கட்டித் தொங்கவிட்டு இரவு பகலாக சிறிலங்காப் பொலிசார் சித்திரவதை!

## யாழ்.மேல் நீதிமன்றில் இளைஞன் வாக்குமூலம்

(வடமராட்சி)

**கால் பெருவிரல் இரண்டினையும் கயிற்றினால் இணைத்து தலை கீழாக தொங்க விட்டு யாழ்.பொலிசார் இரவு பகலாக தன்னைத் தாக்கி சித்திரவதை செய்ததாக இளைஞன் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றில் வாக்கு மூலம் அளித்துள்ளார். ஐந்து தினங்களிற்கு மேலாக பொலிசாரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதால் யாழ்.போதனா வைத்தியசாலையில் 57 தினங்களிற்கு தான் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார்.**

2001 ஆம் ஆண்டின் புரட்டாதி 18 ஆம் திகதியன்று கைக்குண்டொன்றை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி கைது செய்யப்பட்ட மானிப்பாய் சுதுமலையினைச் சேர்ந்த சிவகுமாரன் சகிந்தன் (வயது -17) எனும் குறித்த இளைஞன மீதான வழக்கு கடந்த 31 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வழக்கு தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை வைத்திருத்தல் குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் சாட்சிகளாக யாழ்.பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரியந்த, சார்ஜன் கமலசிறி மென்டிஸ் மற்றும் ஜெயவர்த்தனவும் இராணுவ கப்டன் ஒருவர் உள்ளிட்ட 21 படையினரும் ஆஜராகியிருந்தனர்.

எனினும் பொலிஸ் தரப்பு குறித்த ஆண்டின் புரட்டாதி 18 ஆம் திகதி தமக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்து அவ்விளைஞனை மானிப்பாய்-சுதுமலைப்பகுதியில் வைத்து கைது செய்திருந்ததாகவும், அவரிடம் நடாத்திய விசாரணைகளையடுத்து வீட்டினருகில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டொன்று மீட்கப்பட்டிருந்ததாகவும் மேல் நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

ஆனாலும் தான் குறித்த திகதிக்கு முன்னதாக 14 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கால் பெருவிரல்களை இணைத்து கயிற்றினால் 14ஆம் திகதி இரவும், 15ஆம் திகதி பகலும் தலைகீழாகத் தொங்கவிட்டு தன்னை சித்திரவதைகளிற்கு உள்ளாக்கியதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் கயிறு அறுந்து வீழ்ந்து விட்டதால் முகம் குப்புற விழுந்து காயமடைந்திருந்த தன்னை மீண்டும் கைகள் இரண்டையும் கயிற்றால் கட்டி தொங்க விட்டுத் தாக்கியதாகவும் பின்னர் ஆண் உறுப்பு மீது பலத்த தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் வாக்கு மூலத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவ்வேளையில் பொலிஸ்நிலையத்திற்கு வந்திருந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினது பிரதிநிதியென நம்பப்படும் வெள்ளைக்காரப்பெண் மணியொருவரிடம் தப்பித்து ஓடிச்சென்று தான் அடைக்கலம் கோரியதனையடுத்தே அவரது தலையீட்டையடுத்து 18ஆம் திகதி யாழ்.நீதவானின் வாசஸ் தலத்தில் நீதவான் முன்னிலையில் இரவு வேளையில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்.சிறையில் தடுத்துவைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

முன்னதாக தான் யாழ்.போதனாவைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மருத்துவப்பரிசோதனைக்காக ஆஜர்படுத்தப்பட்டதாகவும், அவ்வேளையில் தனக்கு இளைக்கப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாகப்பிரஸ்தாபித்தால் தனது சகோதரனை சுட்டுக் கொல்லப்போவதாகப் பொலிசார் அச்சுறுத்தி யிருந்ததாகவும் தெரிவித்த அவ்விளைஞன் யாழ்.சிறைச் சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலைக் காவலர்களின் காவலில் 57 நாட்கள் யாழ்.போதனாவைத்தியசாலையில் சித்திரவதைகளுக்கான சிகிச்சைக்காகத்தான் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உளவியல் பாதிப்பிற்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அப்போது தான் சிகிச்சைப் பெற்றதாக வாக்கு மூலமளித்த இளைஞன் குறித்த கைக்குண்டு, தனது வீட்டிற்கருகிலுள்ள காணியில் கைப்பற்றப்பட்டதாகக் கூறி பொலிசாரே எடுத்துவந்ததாகவும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையில் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள இளைஞன் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் உதவியாக மு.திருநாவுக்கரசும் ஆஜராகியிருந்தனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரசசட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும் ஆஜராகியிருந்தார். விசாரணைகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்து மேல்நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ்.வரதராசா உத்தரவிட்டுள்ளார். (27)

# வடக்கு-கிழக்கு மீனவர்களுக்கு 300 படகுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வழங்கல்

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களை மீளவும் தங்கள் வழமையான வாழ்வுக்குள் திருப்பும் முதற்கட்ட நடவடிக்கையாக, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 300 படகுகளை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வடமராட்சி ஆகிய மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முற்றாகப் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு தொழிலை ஆரம்பிக்கும வகையில் இந்தப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இதே வேளை, 'மீளவும் தொழிலுக்குத் திரும்பும் திட்டம்' என்ற திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ள புனர்வாழ்வுக் கழகம், பழுதான படகுகள், வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களைத் திருத்தும் ஆலைகளை உருவாக்கி வருவதாகவும் தொடர்வருகிறது. இத்திட்டத்தின் கீழ் படகுகளைத் திருத்தும் அதேவேளை, புதிய படகுகள், கட்டுமரங்களை உருவாக்குவதுடன், புதிய வலைகள், தூண்டில்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை உருவாக்குவதும் அடங்குகின்றன.

## -'சுனாமி' ஆழிப்பேரலைகளால்-

# கரைதுறைப்பற்று பி.செ.பிரிவில் 60 வீத நெற்செய்கை பாதிப்பு

முல்லை. மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப்பிரதேசச் செயலர் பிரிவில் 'சுனாமி' ஆழிப்பேரலைகளின் தாக்கத்தால் 60வீதமான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேசச் செயலர் பிரிவில் 4632 ஏக்கர் அளவில் மானாவரி நெற்செய்கை மேற்கொள்ளக் கூடிய வயற்காணிகள் உள்ளன. இதில் 3125 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

26.12.2004 இல் ஏற்பட்ட 'சுனாமி' ஆழிப்பேரலைகளின் தாக்கத்தால் 1800 ஏக்கர் நெற்செய்கை வயல்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.. இதில் இப்பெரும்போக நெற்செய்கை நிலத்தில் 60 வீதமானதாகும். இதன்மூலம் 2556 மெற்றிக்தொன் நெல் இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் பெரும் போகத்தில் பயிர் செய்யப்படாத 236 ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் உவர் நீர் உட்புகுந்ததால் பாதிக்கப்பட்டுள்ளன.

மேட்டுநிலப்பயிர்ச் செய்கையில் வெங்காயம், நிலக் கடலை போன்றவை பயிர்செய்யப்பட்ட நிலம் 100 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை பாதிக்கப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்கள் தொடர்பான கணக்கெடுப்பு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லை.மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் இ.கோகுலதாசன் தெரிவித்துள்ளார். (15)

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் 40 ஆம் நாள் பிரார்த்தனை

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்து இறையடி சேர்ந்த ஜனாசாக்களின் நினைவாக சாய்ந்தமருது ஜும் ஆ பள்ளிவாசல் பரிபாலன சபையும் சாய்ந்தமருது சுனாமி அனர்த்த சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கின்ற 40ஆம் நாள் கத்தமுல் குர்ஆனும், மறுமை ஈடேற்றத்திற்கான துஆப் பிரார்த்தனையும், அன்னதானம் வழங்கும் வைபவமும் இன்று இரவு சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது. பள்ளிவாசல் தலைவரும் சுனாமி அனர்த்த சபைத் தலைவருமான ஐ.எம்.முஹைறடீன் தலைமையில் ஏற்பாடுகள், நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மௌலவி யூ.எல்.சம்சுதீனால் துஆ பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.




யாழ். மாவட்ட வர்த்தக சங்கத்தினரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கென 5 இலட்சம் ரூபா பெறுமதியுடைய மகப்பேற்று சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பெறும் சத்திர சிகிச்சை உபகரணங்களை நேற்று கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சதானந்தனிடம் கையளித்தனர். கையளிக் கப்பெற்ற மேற்படி உபகரணங்களின் ஒரு பகுதியினை படத்தில் காணலாம். (படம் :சோதி)

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை பணமாக வழங்கக் கோரல்

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்படும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவை காசாக வழங்கப் படவேண்டுமெனக் குடியமர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது அவர்களுக்கு மீள் குடியமர்வுக்கொடுப்பனவாக 2 ஆயிரத்து 500 ரூபா காசோலையாக வழங்கப்ப டுவதால் சம்பந்தப்பட்ட மக்கள் அதற்காக தரகுக் கூலி கொடுப்பதும் மற்றும் வங்கிகளில் அதிகளவு நேரம் தூங்கிக் கிடப்பதுமாகக் காணப்படுகின்றனர்.

அவர்களுக்கு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் தாக்கத்தின் மத்தியில் இக்காசோலையை மாற்றுவதில் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். எனவே இதனைத தவிர்த்துக்கொள்ளும் வகையில் இக்கொடுப்பனவைக் காசாக வழங்கவேண்டும் எனக் குடியமர்வோர் மேலும் கோரிக்கை விடுக்கின்றனர். (45)

# சங்கக்கிளைகள் இயங்குகின்றன

(பருத்தித்துறை)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்து அழிந்து போன சங்கக் கிளைகள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இப்பகுதிகளில் இடம்பெயர்ந்த அப்பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் மீளசெயற்பட ஆரம்பித்து, நிவாரணங்களையும் வழங்கி வருகிறது.

அழிந்து போன மேற்படி ஆறு கிளைகளில் இரண்டு நிரந்தரக்கட்டடத்திலும் மற்றைய நான்கும் தற்காலிக கட்டடத்திலும் தற்போது செயற்பட்டு வருகின்றன. (45)

# தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியோரால் மலேரியா நோய் பரவும் சாத்தியம்!

## யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கம் எச்சரிக்கை

இந்தியா தமிழக அகதி முகாம்களில் இதுவரை காலமும் வாழ்ந்து விட்டு தற்போது யாழ். குடாநாட்டில் மீளக் குடியேறுவோரால் யாழ்.குடாநாட்டு மக்களிடையே மலேரியா நோய் தீவிரமாகப் பரவக்கூடிய அபாயம் இருப்பதாக யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கம் எச்சரித்துள்ளது.

மாவட்ட ரீதியான ஒப்பீட்டளவில் யாழ். குடாநாட்டில் மலேரியா நோய்த் தாக்கம் குறைவாக உள்ள போதும் இவ்வாறு மீளக்குடியேறி வருவோரின் மூலம் மலேரியா நோய் காவப்பட்டு இவர்கள் குடியேறிய பிரதேசங்களில் இம் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையை தமது மதிப்பீடுகள் மூலம் சுட்டிக்காட்டியே இவ் எச்சரிக்கையை மலேரியா தடுப்பு இயக்கம் விடுத்துள்ளது. (33)

# பளை வர்த்தக நிலையங்கள் முன் தொற்று நோய் பரவும் அபாயம்!

(வடமராட்சி)

பளை பிரதேச சபைக் கட்டடத் தொகுதியின் கீழ் உள்ள கடைத் தொகுதிகளின் முன்னுள்ள நீர் வழிந்து ஓடும் வாய்க்காலில் கழிவு நீர் நிறைந்து இருப்பதனால் அந் நீரில் நிறைய சிறிய புழுக்கள் மற்றும் நுளம்பு போன்றவை அதிகமாகக் காணப்படுகின்றன. அந்நீரை அகற்றி அவ்வாய்க்கால் துப்புரவு செய்யப்படாதுள்ளது. (11)


# சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டு எதுவரை நீடிக்கும்

இந்நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மக்கள் பாரிய உயிர் உடமைகளை இழந்து 5 வாரங்கள் பூர்த்தியாகி விட்டன. இலங்கையின் வரலாற்றில் இதற்கு முன்னர் இப்படியொரு பேரனர்த்தம் ஏற்படவில்லை. அந்த அழிவுகளை மக்கள் படிப்படியாக மறந்துவிடும் நிலை உள்ளது தற்போது நிவாரணங்கள் வழங்கப்பட்டும் புனரமைப்புப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன. எனினும் அநேகமான அனுபவங்கள் மக்கள் மனதைவிட்டு அகலமுடியாதுள்ளது.

அந்த இயற்கையனர்த்தம் ஏற்பட்டு சரியாக ஒருமாதகாலத்தில் அதாவது சனவரி 26ஆம் நாள் இந்நாட்டில் அரசியல் சுனாமிக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. டிசம்பர் 26 சுனாமியால் இந்நாட்டின் அரசியல் ஆட்டம் கண்டுவிடும் என யாரும் நினைக்கவில்லை. எனினும் கடைசிநிமிடத்தில் எடுக்கப்பட்ட சிறு மாற்றத்தால்







அது தடுக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் எவ்வளவு நாளைக்கு நீடிக்கும் என்பதைக் கூறமுடியாது.

சிறிலங்காவில் ஆளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. திடீரென அதிலிருந்து விலகுவதாக அறிவித்தமையே மேற்கூறப்பட்டமைக்குக் காரணமாகும்.

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, செயலர் ரில்வின்சில்வா, பிரச்சார செயலர் விமல்வீரவன்ச மற்றும் அதன் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடந்த புதனன்று (26) கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் ஒன்று கூட ஏற்பாடாகியிருந்தது. அதன் போது அவர்கள் தமது தீவிர முடிவை அரசுக்கு அறிவிப்பதாக இருந்தது. எனினும் அந்த முடிவு இறுதியில் கைவிடப்பட்டது. ஆயினும் அது திடீர் இயற்கைச் சுனாமி போன்ற திடீர் அறிவிப்பாக ஏற்படுத்தப்பட்டது.

இந்தத் திடீர் முடிவுக்குப்பல காரணங்கள் இருந்தன. அதில் முதலாவதாக நோர்வேயின் சமாதான முயற்சி. அதாவது அதனைச்சுனாமி நிவாரணப்பணி என்ற போர்வையில் நோர்வே பணியாற்றுகின்றது என்ற குற்றச்சாட்டாகும். அத்துடன்

சுனாமியால் பாதிக்கப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் நடைபெறும் நிவாரணப்பணிகள், மீள் கட்டமைப்பு வேலைகள் என்பவற்றுள் அரசும் புலிகளும் இணைந்து செயற்படுவதற்கு நோர்வே பாலமாக அமைகிறது என்பதும் அதன் மூலம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க அரசு முயற்சி செய்கிறது என்பதும் ஜே.வி.பி.யின் குற்றச்சாட்டாகும்.

நோர்வே குழுவினர் ஒருவாரம் இங்கு தங்கி நின்றதும் பின்னர் தாயகம் திரும்பியதும், ஓரிருநாட்களில் திரும்பிவந்து சந்திரிகாவின் செய்தியொன்றை விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பித்து பேச்சு நடத்தியதும் பேச்சுக்களில் பேசப்பட்ட விடயங்கள் சில தற்போது வெளியாகியிருப்பதும் ஜே.வி.பி.தரப்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியதற்குக் காரணமாகும். இதனைத் தொடர்ந்து அவர்கள் சந்திரிகா அரசாங்கத்திலிருந்து விலக முடிவெடுத்தனர்.

அதுமட்டுமன்றி அண்மையில் சில முஸ்லிம் பிரமுகர்களையும் நோர்வேப் பிரதி நிதி தன்னுடன் முல்லைத்தீவுக்கு அழைத்து வந்து நிலைமைகளைக்காட்டி அவர்களின் அனுதாபங்களையும் பெற முயற்சித்திருப்பதாக ஜே.வி.பி. கருதியது.

இவ்வாறான நிலைமைகளால் ஜே.வி.பி.யினர் கொந்தளிக்க ஆரம்பித்தனர். அரசுக்கும், புலிகளுக்கும் இடையில்நடைபெற்ற அண்மைய நடவடிக்கைகள் பற்றி ஜே.வி.பி.யினருக்கு அறிவிக்கப்படவில்லை. எனவே இதுதொடர்பாக ஆராயவென ஜே.வி.பி.யினர் அவசர அவசரமாக சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை வரவழைத்து சந்திப்பொன்றை நடத்தினர். இதன்போது சுனாமிப்பாதிப்பிற்குள்ளானவர்கள் தொடர்பான நிவாரணப்பணிகள், மீள்கட்டமைப்பு என்பன அரசுக்கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குச் சமமானவகையில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கும் வழங்கப்படுமானால் அது விடுதலைப்புலிகளை

ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளைப்போன்று அங்கீகரிக்கப்பட்டவர்களாகவே ஜே.வி.பி கருதும் என தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்துடன் போர் புரிந்த வகையில் அவ்வாறு சம அந்தஸ்து வழங்கப்படுவது தவறு என்றும் அவர்கள் சமாதான வழிமுறைக்கு வந்து அரசுடன் ஒத்துப் போகாதவர்கள் என்றும் யுத்தத்தைக் கைவிடாத நிலையிலேயே இருப்பார்கள் என்றும் அந்தச்சந்திப்பின் போது ஜே.வி.பியினர் புலம்பியுள்ளனர். அத்துடன் இவ்வாறான யுத்தநடவடிக்கைகளை ஜே.வி.பியினர் கைவிட்டிருப்பதாகவும் கூறியதுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு மாவட்ட செயலகத்தினூடாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு அவர்களின் ஒன்றிணைப்புக் குழுவொன்றினூடாக அன்றி நேரடியாக விடுதலைப்புலிகளிடம் பணிகளை ஒப்படைப்பது அரசாங்கத்துடன் தாம் கொண்டிருக்கும் ஒப்பந்தத்துக்கு முரணானதாகும் என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இவற்றை விட கடந்த சனவரி மாதம் 25 ஆம் திகதி நள்ளிரவில் ஜே.வி.பி செயற்குழு கூடி ஆலோசனை நடத்திய போது அவர்களின் அரசியல் குழுவினர் அரசாங்கத்துக்கு அளித்த ஆதரவை விலக்கிக்கொள்வது என முடிவு செய்தனர். அதற்கு முன்னதாக கூட்டணி அரசின் சிறு கைத்தொழில் அமைச்சரும் தொழிற்சங்கத் தலைவருமான லால்காந்த சுனாமிக்குப் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் எந்த ஒரு திட்டமும் அரசிடம் இல்லை எனக் கூறியுள்ளார். அத்துடன் கூட்டணியின் ஒற்றுமையைப் பேண முடியாதுள்ள சிறிலங்கா தலைமை எவ்வாறு தேசிய ஒற்றுமையைப் பேணும் எனவும் கேள்வி எழுப்பினார். இயற்கையனர்த்தத்தின் பின்னர் முதலாவதாக அமைச்சரவை கூடிய போது வழக்கமாக பிரசுரம் ஒன்றை விநியோகிக்கும் நேரம் இடையில் சுனாமி பற்றி கதைத்ததால் தமது சகாக்களைக் கூட லால்காந்த விமர்சித்தார். அதன் போது நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தவரான தாரா டி மெல்லும் மனோ தித்தவெல ஆகியோரும் விமர்சனத்துக் குட்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக லக்ஸ்மன் கதிர்காமர் ஜே.வி.பியினரை சந்தித்து உரையாட விரும்பி தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரம் ஒன்றையும் ஒதுக்கினார். சில விடயங்களில் கதிர்காமருக்கும் ஜே.வி.பியினருக்கு ஒத்துப்போகும் சந்தர்ப்பங்கள் இருந்தன. கடந்த ஏப்ரலில் கதிர்காமரை பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஜே.வி.பி அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் சந்திரிகா கதிர்காமரை ஏதோ ஒரு விடயமாதுப் பேச அழைப்பு விடுத்திருந்தார். சந்திரிகா இவர்களின் சந்திப்பை குழப்பும் நோக்கத்திலேயே இதனைச் செய்துள்ளார். எனினும் அவர்களுக்கு இடையில் சந்திப்பு நடைபெற்றது. இதன் போது வெளிநாட்டு அதிகாரிகளின் வருகை பற்றியும் அவர்கள் அளிக்கும் உதவிகள் பற்றியும் விடுதலைப்புலிகளுடன் கொண்டிருக்கும் தொடர்பு பற்றியும் கேட்டுள்ளனர்.

இதன் போது அரசின் திட்டங்கள் பற்றி விபரித்ததுடன் புலிகளுடன் விசேடமான உடன்பாடு எதனையும் அரசு கொண்டிருக்கவில்லை என்றும் ஜே.வி.பி யினருக்கு தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் அரசு கொண்டிருக்கும் தொடர்பு தமக்கு சந்தேகத்தைக் கிளப்புவதாக ஜே.வி.பியினர் கூறியதற்கு கதிர்காமர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் கூடிய ஜே.வி.பி யினர் அரசுக்கு வழங்கும் ஆதரவைத் தாம் நிறுத்திக்கொள்ளும் அறிவித்தலை விடுக்கப் போவதாக முடிவெடுத்த நிலையில் கட்சியின் சில உறுப்பினர்கள் இதனை விரும்பாத நிலையில் முடிவு கைவிடப்பட்டது.

இவ்வாறு விடுதலைப்புலிகளுக்கு கூடுதல் நிதியுதவியும் மீட்புப் பணிகளும் அரசினால் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறிந்ததாலேயே ஜே.வி.பியினர் கடந்த 26 ஆம் திகதி திடீரெனக் கூடி அரசுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்தி அரசில் இருந்து விலகப்போவதாக அறிவிக்க முடிவு செய்தனர்.

இதனை விட அரசுக்குள் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி சந்திரிகா நடந்துகொள்ளவில்லை என்பதும் சுனாமி பாதிப்பிற்குள்ளான பின்னர் கரையோரப்பாதுகாப்பு வலயச் சட்டத்தை ஜே.வி.பி யினர் நிராகரித்து மக்களையும் இதற்கு அடிபணிய வேண்டாம் என ஜே.வி.பி யினர் வற்புறுத்தி வருவதும் அண்மைக்கால சிறிலங்கா அரசுக்குள் நடைபெறும் உள்வீட்டுப் பூசலாகும். இதன் விளைவுகளால் சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் ஜே.வி.பி கூட்டணியும் திடீர் சுனாமியினால் அழிவைச் சந்திக்குமா என்பது வரும் நாட்களில் தெரிந்து விடும். ■

பிரேமச்சந்திர அல்விஸ்
(லங்காதீப)
தமிழில்:-வடிவேல்

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

# இவ்வளவு சனமும் இதில எப்பிடி ஏறிச்சுதுகள் எண்டுறதுபாக்க எனக்கே திகைப்பாய் இருந்தது

**அலைகள் மூர்க்கமாக எழுந்தடித்த வேளை முல்லைத்தீவு பஸ் தரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்சை இயக்கிக்கொண்டு சிதறி ஓடிய மக்களில் நூறுக்கும் அதிகமானவர்களை ஏற்றிச்சென்ற மதிமன்னன் -தர்மகுலசீலன் (ராசன் வயது 27) என்ற தமிழீழ போக்குவரத்துக் கழக சாரதி தனது அனுபவத்தைப் பகிர்கிறார்.**

பகுதி--14

முல்லைத்தீவிலிருந்து முள்ளியவளை நோக்கிச் செல்கின்ற எனது பஸ்சை முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் காலை எட்டு முப்பது மணியளவில் கொண்டு போய் நிறுத்திவிட்டு அதன் அருகில் நின்று கொண்டிருந்தேன்.அன்றும் வழமைபோலத்தான காலநிலை இருந்தது. காற்றோ அல்லது வெப்பமோ, குளிரோ எதிலுமே ஒருமாற்றமும் இல்லை. சிறிதாக மழைத்தூறல் விழுந்து கொண்டிருந்தது. அதனால் நான் பஸ்நிலையக் கட்டடத்தின் உள்ளே போய் இருந்தேன்.

எங்களது பஸ் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் தான் இருந்தன. இந்த நிலையில் பஸ்நடத்துனர் பயணிகளிடம் பயணச்சிட்டைகளை வழங்குவதற்காகப் போய்க்கொண்டிருந்தார். அவர் போய் பஸ்சில் ஏறிய சில நிமிடங்களில் ஒருபெரும் வெடிச்சத்தம் கேட்டது.

அந்த வெடிச்சத்தத்துடன் பெரும் இரைச்சலும் கேட்டுக் கொண்டிருந்தது.என்ன சத்தமாக இருக்கும். வெடியோசை, இரைச்சல் இரண்டையும் வைத்துப்பார்க்கின்ற போது சண்டைக்காலத்தில் கிபிர் வந்து அடிப்பது போலத்தான் இருந்தது.

எங்கள் பஸ்சிற்குள் இருபத்தைந்துக்கும் அதிகமானவர்கள் இருந்திருப்பார்கள். அந்த சத்தத்தைக்கேட்டதும் அவர்கள் எல்லோரும் முண்டி அடித்து கீழே இறங்கி விட்டார்கள் அத்துடன் பஸ் தரிப்பு நிலையத்தில் நின்ற ஏனையவர்களையும் சேர்த்தால் எழுபத்தைந்துக்கும் அதிகமானவர்கள் பஸ்நிலைய வீதியில் நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தனர். சிலர் தமது கண்ணுக்கும் மேலாக கையை வைத்து வானத்தில் கிபிரைத்தேடிக்கொண்டிருந்தனர்.

இப்படியிருக்க நாங்களும் வெளியால வந்து வானத்தைப் பார்த்தோம். எதையுமே காணவில்லை. ஆனால் கடற் கரைப்பக்கம் இருந்து சிலர் ஓடிவந்தது மட்டும் தெரிந்தது. நான் அதைப்பார்த்து ஏன் ஓடுகிறார்கள் என்று யோசித்தவாறு வானத்தைத்தான் பார்த்தேன். திடீரெனயாரோ கடலைப் பார்த்திருக்க வேண்டும் "என்ரஐயோ உது என்ன கடல் இப்படி வருகுது" எண்டு கத்தினார். அதில் நின்ற எல்லாரும் திகைத்துப் போனோம். வானத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும் கடலைப்பார்த்து பார்த்து கால் போன திசையில் ஓடிக்கொண்டிருந்தனர். இப்படி இருக்க அருகில் இன்னுமொரு போக்குவரத்துக்கழக சாரதியும் நின்றார். நாங்கள் கடலைப்பார்த்தபோது கடல் கருங் கறுப்பாய் பனைக்கு மேலாகப் பாய்ந்து எழும்பி விழுந்து ஓடிவந்தது.

வேதக் கோயிலுக்கு மேலால் கடற்கரையில் நின்ற மீன்பிடிப்படகுகள் மின்னல் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. அதைப்பார்த்த உடனே என்னுடன் நின்ற மற்றசாரதியிடம் "மச்சான் பஸ்சை எடுத்துக்கொண்டு ஓடு" என்று சொல்லிக்கொண்டு நான் நிறுத்திவைத்த பஸ்சை எடுப்பதற்காக ஓடினேன்.

அவர் "பஸ்சை எடுத்துக்கொண்டு ஓடித்தப்பஏலாது நான் ஓடப்போறன்" எண்டு சொல்லிக்கொண்டு ஓட வெளிக்கிட்டு விட்டார். அவர் ஓடுவதைப்பார்க்க எனக்கும் பயமாய்த்தான் இருந்தது. ஆனாலும் ஒருமாதிரி பஸ்சை எடுத்துக்கொண்டு ஓட வெளிக்கிட முல்லைத்தீவுச்சந்தி ஆலமரத் தடியில் சனம் குவியல் குவியாலாக றோட்டின் குறுக்காக நின்று மறித்தார்கள். நான் பஸ்சை நிறுத்திவிட்டேன்.

குஞ்சுகள், குருமனுகள், பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் என்ற வேறுபாடே இல்லாமல் எல்லோருமாய் சேர்ந்து பஸ்கதவால் அடிபட்டுப் பிணைபட்டு ஏறிக் கொண்டிருந்தனர். இப்படி இருக்க எங்களை விலத்திக்கொண்டு கடல் வந்து விட்டது.

சிறிது சிறிதாக கடல்மட்டம் கூடிக் கொண்டு வந்து சில்லு அளவுக்கு ஏறி விட்டது. சனமோ பஸ்சை விட்டபாடில்லை. இதுக்குமேலும் நிண்டால் ஆபத்து என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால் சனம் விட்டபாடாய் இல்லை. எப்படியே ஏத்தக்



கூடிய அளவுக்கு ஏத்திவிட்டு பஸ்சை வேகமாக இழுத்துக்கொண்டு வர கச்சேரியடியில் வைத்து அடுத்தகுவியல் சனம் குறுக்காக வந்து தண்ணீக்குள் நின்று பஸ்சை மறித்தார்கள். அவர்களை எப்படி விட்டுட்டுப் போவது. மனம் கேட்கவில்லை நிறுத்தி விட்டேன்.

நான் முந்தி நீ முந்தி என்று அடிபட்டு ஏறிக்கொண்டிருந்தனர். இந்த இடத்தில்





பஸ்சிற்கு உள்ளே இருந்தவர்கள் "தம்பி பஸ்ச்சை எடு பஸ்சை எடு தண்ணி இந்தா வந்து கொண்டிருக்கு" எண்டு பெரிதாக கத்திக்கொண்டிருந்தனர். சிலர் என் தோள் மூட்டுக்களில் அடித்து "பஸ்சை எடுங்கள்" எண்டு கத்தினர்.

இந்த நிலையில் நான் எதைச் செய்வது வெளியில் நிற்கிறவர்கள் "ஓடாதேங்கோ எங்களையும் ஏத்திக்கொண்டு போங்கோ" என்று கத்தியவாறு பஸ்சுக்கு முன்னால் நின்று மண்டாடிக் கொண்டிருந்தனர்.

இதேநிலை யில் பஸ்சுக்குள் இருப்பவர்கள் "பஸ்சை எடு தம்பி எடு" என்று கதறிக்கொண்டிருந்தனர். நான் எதைச் செய்வது என்று தெரியவில்லை. வெளியில் நிற்பவர்களை பார்ப்பதா? உள்ளே நிற்பவர்களைப் பார்ப்பதா? எல்லாமே குழப்பமாக இருந்தது. எனது தோள்கள் இரண்டினதும் வலி தாங்க முடியாமல் போய் விட்டது. அந்தளவுக்கு உள்ளுக்குள் இருந்த சனங்கள் "பஸ்சை எடு பஸ்சை எடு" எண்டு அடித்து விட்டார்கள்.

இப்படி இருக்க மெதுவாக பஸ்சை எடுத்துக்கொண்டு போ்னேன். விளையாட்டு மைதான றோட்டை மேவி கடல் ஓடிக் கொண்டிருந்தது. இப்போது எனக்கும் சாதுவான பயம் வந்து விட்டது. ஆனாலும் பஸ்சுக்கு முன்னால் நின்று கதறிக்கொண்டிருப்பவர்களை விட்டு விட்டு போக மனம் கேட்கவில்லை. அப்படி இருந்தும் பஸ் நிறைந்து விட்டது. இந்நிலையில் இன்னும் நின்றால் பஸ்சுக்குள் இருப்பவர்கள் எல்லோரையும் இழக்க வேண்டிய நிலைதான் வரும் முள்ளியவளைக்குப் போகின்ற விளையாட்டு மைதானப் பாதையில் தண்ணி மட்டம் அதிகரிக்க நான் பஸ்சை எடுத்து விட்டேன்.

பஸ்சை மெதுவாக ஓட்டிப்போகின்ற வேளை மேல் கூடாரத்தில் தொங்கிப் பிடித்தவாறு எல்லாம் ஆக்கள் ஏறிக்கொண்டிருந்தார்கள். அதில் ஏறுவதற்கு அடிபட்டுக் கொண்டும் இருந்தார்கள். ஆக்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. எவற்றிலெல்லாம் பிடிச்சுக்கொண்டு நிற்கலாமோ அவற்றில் எல்லாமே பிடிச்சுத் தப்பட்டும் என்று விட்டு விட்டேன். ஒரு கட்டத்தில் கூடார ஏணியில் எல்லாம் தொங்கிப் பிடிச்சுக்கொண்டு வந்தார்கள். விழுந்தால் என்ன நிலைமை பறவாய் இல்லை. ஆபத்தான இடத்தில் இருந்து தானே ஏத்திக்கொண்டு போறன். என்ற மனத் திருப்தியுடன் ஏற்றிக்கொண்டு போனேன். இப்படியே நான் விளையாட்டு மைதான றோட்டைக் கடக்க தண்ணிமட்டம் வெகுவாக அதிகரிக்கத் தொடங்கி விட்டது.

ஆக்களை எல்லாம் ஏத்திக் கொண்டு பெற்றோல் செற் இருந்த இடத்துக்கு போய் சேர்ந்து விட்டேன். காவல்துறையினர் பஸ்சை மறித்தார்கள். ஆனால் உள்ளுக்குள் இருந்தவ கள் மறிக்கவிடவில்லை. சேச்சில் பூசை நடந்தபடியால் அதால பாதை நிப்பாட்டி இருந்திருக்க வேணும். பஸ்சை சேச்சுக்கு அங்கால கொண்டு போய் நிப்பாட்டிப் போட்டு இறங்கி வந்து காவல்துறைக்கு சம்பவத்தைச் சொன்னேன். அதன் பிறகு சேச்சின் உள்ளே போனோம். அங்கோ பூசை நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் தங்களை மறந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

இப்படி இருக்க பஸ்சில் வந்த சனங்கள் "ஐயோ கடல் பெரிசாய் வந்து சனத்தை எல்லாம் அடிச்சுக்கொண்டு போட்டுது. எல்லோரும் ஓடுங்கோ" எண்டு சேச்சுக்குள் போய் கதறினார்கள். பூசை குழம்பி விட்டது. சனங்கள் எல்லாம் திகைத்துப்போய் விட்டனர். அவ ள் சம்பவத்தை நம்பவில்லை. சிலர் பூசையைக் குழப்பி விட்டதாக ஆத்திரமடைந்தனர். உண்மையை நம்ப மறுத்து விட்டார்கள்.

என்ன செய்வது பஸ்றோட்டில் நிற்கேக்க பெற்றோல் செற்றுக்குப் பின்பக்கத்தால் தண்ணி வந்து றோட்டை மேவிக்கொண்டிருந்தது. அவர்களைக் கூப்பிட்டு இஞ்ச பாருங்கோ கடல் தண்ணி இதால வந்திட்டுது முல்லைத் தீவுப் பக்கம் போகாதேங்கோ இஞ்சால முள்ளியவளைப் பக்கம் ஓடுங்கோ எண்டு சொல்லி விட்டு நான் பஸ்சை எடுத்தேன். பிறகும் சனம் ஏறியது. எப்படி ஏறினார்களோ தெரியாது. ஏறிக்கொண்டிருந்தார்கள்.

நான் எனது இரண்டு வருட சாரதி அனுபவத்தில இப்படிச் சனத்தை ஏற்றினதே இல்லை. அப்படியான சம்பவத்தைச் சந்தித்ததும் இல்லை. பஸ்சுக்குள் ஒரே கதறல். சத்தம் காதைக் கிழித்தது. அதை விட "வேகமா ஓடுங்கோ தம்பி"எண்டு சனம் எல்லாம் என்ர தோளில அடிச்சு அடிச்சு கத்தினார்கள். அதால என்ர தோள் மூட்டு எல்லாம் நோகத் தொடங்கி விட்டுது. ஒரு மாதிரி அவ்வளவு சனத்தையும் கொண்டுபோய் முள்ளியவளையில இறக்கிப் போட்டு மிச்ச ஆக்களைப் புதுக்குடியிருப்புக்கு கொண்டுபோய் இறக்கி விட்டுட்டன்.

அ.லோகீசன்

ஒரு சில நிமிடங்களில் நூறுக்கும் அதிகமான சனத்தை ஒற்றைக் கதவு பஸ்சில ஏத்தினது இது தான் முதல் தரம். இவ்வளவு சனமும் இந்த பஸ்சில எப்படி ஏறினார்கள் என்பதைப் பார்க்க எனக்கே திகைப்பாய் இருந்தது. அப்படி ஏத்தி அவ்வளவு பேரையும் தப்பவைச்சிட்டன் எண்டுற மகிழ்ச்சி எனக்கு இப்பவும் இருக்குது. ஆனாலும் பஸ்சை மறிச்ச கனபேரை ஏத்த ஏலாமல் போட்டுது எண்டு கவலையும் ஒரு பக்கத்தில இருக்குது. என்னால முடிஞ்சது அது தான். அதை சரியாய் செய்து போட்டன் என்றார் அந்தச் சாரதி.

முல்லை கடல் கரையோத்தில் அமைந்துள்ள மணல் குடியிருப்பு கிராமத்தில் உள்ள தனது வீட்டில் தான் ஊட்டி வளர்த்த நான்கு பிள்ளைகளுடனும் அன்பான மனைவியுடனும் வசித்துவந்த போது கடலின் குமுறலுக்குள் சிக்குண்டு மூன்று பிள்ளைகளையும் மனைவியையும் காப்பாற்ற கடுமையாக முயன்றும் அலைக்கு பறிகொடுத்துவிட்ட குடும்பத் தலைவர் ஒருவரின் கண்ணீர்க் கதையை அடுத்த தொடரில் உங்களுக்கு தருகிறோம்

(தொடரும்)

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

**26.12.2004 இல் முல்லைத்தீவு, கள்ளப்பாட்டில் சுனாமி கடல் அனர்த்தத்தால் எம்மை விட்டுப் பிரிந்த எம்பாச உறவுகளான,**

திருமதி. செல்லையா நாகமுத்து
திருமதி. கதிரித்தம்பி தங்கேஸ்வரி
திருமதி. சிவபாலன் கமலநாயகி
செல்வன். சிவபாலன் யதுர்சன்
செல்வன். சிவபாலன் பிரவீன்
செல்வி. செல்லையா தங்கமலர்
செல்வி. சுப்பிரமணியம் புஸ்பரஜனி


**ஆகியோரின் ஆத்ம சாந்தி வேண்டி 2005 .02 . 04 ஆம் திகதி (41 ஆம் நாள்) தேவிபுரம் சந்தி, கண்ணன் மருத்துவமனைக்கு அருகாமையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மாசியம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகளில் கலந்து கொண்டு இவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.**


*திரு.க.சிவபாலன் (சிவா),*
*தேவிபுரம் சந்தி,*
*தேவிபுரம்.*

*இங்கனம்.*
*திரு.க.வாசு குடும்பத்தினர்,*
*Dr.திரு.இ.லோகநாதன் குடும்பத்தினர்,*
*7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.*

(5670)

# 41ஆம் நாள் நினைவஞ்சலி





அமரர் திருமதி
சூசைப்பிள்ளை மார்த்தம்மா (மணி)
மணற்குடியிருப்பு
முல்லைத்திவு

இறப்பு: 26-12-2004

சூ அமலதாஸ், அ.சரோஜாதேவி,
அ.ஜெயக்குமார், அ.கஜேந்தினி,
அ.பிரியங்கா

சூசைப்பிள்ளை அமலதாஸ் குடும்பத்தினர்
கள்ளப்பாடு முல்லைத்தீவு

மண்ணில் ஒன்றாக வாழ்ந்தவர்களே
விண்ணில் ஒன்றாக வாழ சென்றுவிட்டீர்களோ

உங்கள் ஆன்மா இறைபாதம் சேர இறைவனை வேண்டுகிறோம். இவர்களின் ஆத்மசாந்திக்காக04.02.2005 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**முகவரி :- நீராவிப் பிட்டி**
**கொக்குத் தொடுவாய்,**
**பாடசாலை அருகாமை தண்ணீரூற்று,**
**முள்ளியவளை.**

**இவரின் பிரிவால் துயருறும்**
**சூ.ஜீவதாஸ் குடும்பத்தினர்**
**(டென்மார்க்)**

(5621)

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

கனகரத்தினம் திரேசம்மா
(செல்லம்)
1930-10-03

ச.மேரி அகிலா
1980-02-14

பி.செல்வராஜேஸ்வரி
(பவளம்)
1951-07-23

சந்திரசேகரம் அனோஜா
1997-12-07

லோ.இரத்தினேஸ்வரி
(திலகம்)
1983-03-13

க.கோமளேஸ்வரி
(கோமா)
1971-10-28

சந்திரசேகரம் அரோதா
2004-12-10



நீங்கள் என்றும் எம்மனதில்
நீங்கா நிழலாய் நிலைத்திருப்பீர்
காலம் உம்மை அழைத்தாலும்
எம் கண்ணுக்குள் என்றும் வாழ்ந்திருப்பீர்

ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் செல்வபுரம் முல்லைத்தீவுப் பகுதியில் அகாலச்சாவடைந்த உறவுகளின் பிரிவுச் செய்தி அறிந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு எம்மை ஆறுதல்படுத்தி எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை 04.02.2005 வெள்ளிக்கிழமை 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன்

**உன்பிரிவால் துயருறும் பாச உறவுகள்**

தற்போதைய முகவரி
க.நாகேந்திரராசா
நாகேந்திரம் வெதுப்பகம்
2ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

செல்வபுரம்
முல்லைத்தீவு.

(5622)

**2004-12-26 அன்று முல்லைத்தீவு செல்வபுரத்தில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால் உயிர்நீத்த எமது உறவுகளை நினைவுகூரும் நிழல்படம்**

# தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்

## புதிய இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜே.ஜே.சிங்



(புதுடில்லி)

''இராணுவத்தை எதிர்ப்பவர்கள் மீதான உறுதியான நடவடிக்கையில் மனிதாபிமானமும் இருக்கும்" என்று இந்திய இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதி ஜே.ஜே.சிங் அறிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்து வந்த என்.சி.விஜ் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக மேற்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக இருந்து வந்த ஜே.ஜே.சிங் புதிய தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

டில்லியில் நடந்த விழாவில் ஜே.ஜே.சிங் புதிய தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பதவியேற்ற பிறகு அவர் இராணுவ வீரர்களுக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியிருப்பதாவது,

தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இருந்த போதிலும் அதில் மனிதாபிமானமும் இருக்கும். தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் போது அப்பாவிப் பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் குறைந்த பட்ச பலத்தை பிரயோகிக்கும் படி இராணுவ வீரர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

காஷ்மீர் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் அமைதிக்கான முயற்சிக்கு மக்களைத் தூண்ட வேண்டும். காஷ்மீர் மக்களின் இதயத்திலும், எண்ணத்திலும் இடம் பிடிப்பதே எனது முதல் பணியாகும்.

காஷ்மீர் மாநிலத்தில் புதிதாகப் படைகளை வாபஸ் பெறுவது பற்றி அங்குள்ள நிலவரங்களைப் பரிசீலனை செய்த பிறகே முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பீகார், அரியானா, ஜார்க்கண்ட் மாநிலங்களில் தேர்தல் முதற்கட்ட வாக்குப் பதிவுகள் இன்று ஆரம்பம்!

(புதுடில்லி)

இந்தியாவின் பீகார், அரியானா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் சட்ட சபைத் தேர்தல்கள் ஆரம்பித்துள்ளன. இதன் முதற் கட்ட வாக்குப் பதிவுகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன.

பீகார் மாநிலத்தில் மொத்தம் 243 சட்ட சபைத் தொகுதிகள் இருக்கின்றன. இவைகளுக்கு வருகிற 3,15,23 ஆகிய திகதிகளில் மூன்று கட்டமாகத் தேர்தல்கள் நடைபெறுகின்றது. முதற் கட்டத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது. ஆளும் கட்சியான ராஷ்டிரீய ஜனதாதளக் கட்சியும், எதிர்க்கட்சியான லோக் ஜனசக்தி கட்சியும், மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. ஆனால் பீகார் மாநில சட்ட சபைத் தேர்தலில் இரு கட்சிகளும் நேருக்கு நேர் மோதுகின்றன.

பீகார் மாநிலத்தில் லோக் ஜனசக்தி கட்சியுடன், காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றது. லோக் ஜனசக்தி 43 தொகுதிகளிலும், காங்கிரஸ் 21 தொகுதிகளிலும், வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. ஆளும் ராஷ்டிரிய ஜனதாத்தளம் 54 தொகுதிகளிலும் மிகுதியாக உள்ள 10 தொகுதிகளை அதன் கூட்டணிக் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகளுக்கு ஒதுக்கியுள்ளது.

ஐக்கிய ஜனதாத் தளம் 37 தொகுதிகளிலும், மிகுதி உள்ள 27 தொகுதிகளை அதன் கூட்டணிக் கட்சியான பா.ஜனதாவுக்கும் ஒதுக்கியுள்ளது. பீகார் சட்ட சபை சபாநாயகர் ககல்கரன் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். அவரை எதிர்த்து ஆளும் ராஷ்டிரீய ஜனதாத் தளம் வேட்பாளர்களைத் நிறுத்தவில்லை.

பீகார் மாநிலத்தில் இன்று நடைபெறும் முதற் கட்டத் தேர்தலில் மூன்று மந்திரிகள் உட்பட 826 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். பீகார் மாநில தேர்தல் பணிக்கு டில்லியில் இருந்து மத்திய ஆயுதப் படைப் பொலிசார் 8,700 பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மாநில பொலிசாருடன் இவர்கள் இணைந்து தேர்தல் பணியாற்றுவார்கள். இது தவிர துணை இராணுவமும் தயார் நிலையில் பாட்னா நகரில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. பதட்டம் நிறைந்த வாக்குச் சாவடிகளில் துணை இராணுவம் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

அரியானா மாநிலத்தில் மொத்தம் 90 சட்டசபைத் தொகுதிகள் உள்ளன. அங்கு ஒரே கட்டமாக நாளை வாக்குப் பதிவு நடைபெறுகின்றது. அங்கு காங்கிரஸ் கட்சிக்கும், சவுதலா தலைமையிலான இந்திய தேசிய லோக் தளக் கட்சிக்கும் இடையேதான் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. பா.ஜனதாவும், தனது வேட்பாளர்களை அங்கு நிறுத்தியுள்ளது. ஆளும் இந்திய தேசிய லோக் தளக் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றது.

90 தொகுதிகளிலும் மாநில பொலிசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் உள்ள 81 தொகுதிகளில் 3,15,23 ஆகிய திகதிகளில் 3 கட்டமாக தேர்தல் நடைபெறுகின்றது. முதற் கட்டத் தேர்தல் 24 தொகுதிகளில் இன்று நடக்கின்றது. மத்திய மந்திரி சிபுசோரனின் முக்தி மோட்சா கட்சியுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. 2000 ஆம் ஆண்டில் ஜார்க்கண்ட் மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் சட்ட சபை தேர்தல் இது. மொத்தம் 53,60,098 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கிறார்கள்.

பிரதமர் மன்மோகன்சிங், பா.ஜனதாத் தலைவர் அத்வானி, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி உட்பட அனைத்து கட்சித் தலைவர்களும் தீவிர பிரச்சாரம் செய்திருந்தார்கள்.

நக்சலைட்டுகள் அதிகமாக நிறைந்துள்ள தொகுதிகளில் முதற் கட்டத் தேர்தல் நடைபெறுகின்றது. இதனால் 24 தொகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.எஸ் கிருஷ்ணமூர்த்தி அறிவித்தார்.

# வங்கக் கடல் நீரின் வெப்பம் திடீரெனக் குறைந்ததினால் விஞ்ஞானிகள் திகைப்பு

(புதுடில்லி)

சுனாமிக்குப் பின்னர் வங்காள கடல் நீரின் வெப்பம் திடீரென்று குறைந்திருக்கின்றது. இதற்கான காரணம் தெரியாமல் விஞ்ஞானிகள் திகைப்பில் மூழ்கியுள்ளனர்.

சுனாமி பேரழிவின் பயத்தில் இருந்து மக்கள் மெல்ல மெல்ல விடுபட்டு வரும் இந்த நேரத்தில் சுனாமி ஏற்படுத்திய சுற்றுச் சூழல் மாற்றங்கள் விஞ்ஞானிகளுக்கு ஆச்சரியத்தையும் திகைப்பையும் ஏற்படுத்தி வருகின்றன. அந்தமானில் சங்கிலித் தொடர் போல நடந்து வரும் நிலநடுக்கத்துக்கு இன்னும் காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதற்கிடையே சுனாமி பேரலைகள் வந்து போன பின்னர் வங்கக்கடல் நீரின் வெப்பம் திடீரென்று குறைந்ததாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் வங்கக் கடலின் வெப்பம் சுமார் 1 முதல் 1.5 டிகிரி வரை குறைந்து, தண்ணீர் குளிர்ந்தது. 20 ஆயிரம் கிலோ மீற்றர் நீளம், 10 ஆயிரம் கிலோ மீற்றர் அகல கடற் பரப்பளவில் இந்த வெப்ப நிலை சரிவு காணப்பட்டது. இதை இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத்தின் (ஐ.எஸ்.ஆர்.ஓ) செயற்கைக் கோள் கண்டுபிடித்து தகவல் அனுப்பி இருப்பதாக அதன் கடல் விஞ்ஞானப் பிரிவு தலைவர் விஜய். கே.அகர்வால் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். வங்கக் கடலில் ஏற்பட்ட வெப்ப சரிவு 4 முதல் 5 நாட்கள் வரை நீடித்ததாகவும் பின்னர் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி விட்டதாகவும் அவர் கூறினார்.

கடல் நீரின் வெப்பம் குறைந்ததற்கு காரணம் என்ன என்பது தெரியவில்லை. சுனாமியால் இந்த மாற்றம் ஏற்பட்டதா என்பதை இப்போதே சொல்ல முடியாது என்றார் அகர்வால். விஞ்ஞானிகளுக்கு திகைப்பை ஏற்படுத்தி இருக்கும் இந்த வெப்ப நிலைச் சரிவு, கடல் உயிரியலில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அதற்கு மேல் எங்களால் எதையும் ஊகிக்க முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

# 41 ஆம் நாள் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| இயற்கையின் அவதரிப்பு | சுனாமியின் அரவணைப்பு |
| --- | --- |
| 17 | 26 |
| 12 | 12 |
| 1976 | 2004 |



சுலோசனா.சூரியகுமாரி சூரியமூர்த்தி

திதி 04.02.2005 வெள்ளிக்கிழமை

முதுமாணிப்பட்டதாரி பேராதனை பல்கலைக்கழகம்

எங்கள் குலவிளக்கு சுனாமிப் பேரலையால் அணைந்த செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் எமது இல்லத்தில் 04. 02. 2005 வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
சூரியமூர்த்தி குடும்பத்தினர்,
"தெய்வாசா"
மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி.

(சி.11234)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 2005.02.14 பி.ப 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 2005.02.15 ந.ப 12 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி:- 2005.02.15.பி.ப.3.00 மணிக்கு

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் உட்பட) |
| --- | --- | --- |
| 01.உசத்தியோடை இந்துமயான எரிக்கும் கொட்டகை அமைத்தல் | 3500.00 | 575.00 |
| 02.மத்தாளோடை இந்துமயான எரிக்கும் கொட்டகை அமைத்தல். | 3500.00 | 575.00 |
| 03.தம்பளை இந்துமயான எரிக்கும் கொட்டகை அமைத்தல். | 3500.00 | 575.00 |
| 04.திடற்புலம் இந்துமயான எரிக்கும் கொட்டகை அமைத்தல். | 3500.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது புற மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப் படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலகத் துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2005.02.01

(சி.11304)

# அக்ரம், வக்கார் மீது அக்தர் பாய்ச்சல்




"எப்போதெல்லாம் அணி தடுமாறுகிறதோ, அப்போதெல்லாம் அக்ரமும்,யூனிஸும் என்னைப் பலிக் கடாவாக்குகின்றனர்." என பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப்அக்தர் கருத்துத் தெரிவித்துள்ளார். அணியின் வெற்றி வீரராக இனிமேல் அக்தர் இருக்க முடியாது. இந்திய வீரர் இர்பான் பதானின் வீச்சே வல்லமை கொண்டது என முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரமும் வக்கார் யூனிஸும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கடும் அதிருப்தி தெரிவித்தார். அக்தர் இஸ்லாமபாத்தில் திங்கட்கிழமை கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றைப் பார்வையிட வந்தபோது நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

அக்ரம் சிறந்த பந்து வீச்சாளர்தான் அதற்காக அவரை மதிக்கிறேன். ஆனால் ஆட்டத்தை வென்று தரும் திறமை எனக்கு இல்லை என அவர் கூறியது என்னை மிகவும் பாதித்தது. ஆனால் அடுத்தவர்களைப் பற்றி விமர்சிக்காமல் அவர் அமைதியாக இருப்பது நல்லது எனக் கருதுகிறேன்.

வேண்டும் என்றால், அவர் அணியில் இருந்த போது நடைபெற்ற ஆட்டங்களை ஆராய்ந்து பார்க்கட்டும். யார் அதிகமான விக்கெட்டுகளைக் கைப்பற்றியது என்று தெரியும் என காரசாரமாக கருத்துத் தெரிவித்தார். அக்தர் அணியில் எப்போதாவது வீழ்ச்சி தென்பட்டால் உடனே என்னை அதற்கு பலிக் கடாவாக்குகின்றனர் என்றார்.

# நான் கிரிக்கெட் ரசிகையல்ல யதார்த்தமானவர் முரளிதரன்



சென்னை மலர் மருத்துவ மனை இயக்குநர் மதிமலரை கைப்பிடிக்கிறார் இலங்கைகிரிக்கெட்சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். இருவீட்டாரும் சேர்ந்து நிச்சயிக்கப்பட்ட இத் திருமணம் மார்ச் 21ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.

சென்னையைச் சேர்ந்த டாக்டர் எஸ். ராமமூர்த்தி, டாக்டர் நித்யா ராமமூர்த்தி தம்பதிக்கு பிறந்த இரட்டைக் குழந்தைகள் மதிமலர், ரதிமலர் அதில் இரண்டா வதாகப் பிறந்தவர்தான் மதிமலர் (வயது-24) முரளிதரனை மணம்செய்து கொள்ளப் போவதை அறிந்ததும் நான் உணர்ச்சிவசப்பட்டேன். அவர் மிகவும் யதார்த்தமானவர். அவரைத் திருமணம் செய்து கொள்வதை எனது தோழிகளால் நம்ப முடியவில்லை" என மகிழ்ச்சி தெரிவித்துள்ளார் எம்.பி.ஏ. பட்டம் பெற்றுள்ள மதிமலர்.

"அப்பா அளவுக்கு கிரிக்கெட் ஆட்டங்களை நான் பார்த்ததில்லை. நான் தீவிரமான கிரிக்கெட் ரசிகையும் கிடையாது. தற்போதுதான் கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்க்க ஆரம்பித்துள்ளேன். உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் அவுஸ்திரேலியாவில் சமீபத்தில் நடைபெற்ற சுனாமி நல நிதி கிரிக்கெட் ஆட்டமே முரளிதரன் பங்கேற்று, நான் பார்த்த முதல் ஆட்டம்" எனத் தெரிவித்துள்ளார். மதிமலர்.

# உலக 11பேர் அணி-அவுஸ். அணி மோதும் பிரமாண்டமான கிரிக்கெட்தொடர் ஒக்ரோபரில்



மைக்ஆர்தர்டன்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் உலக பதினொரு பேர் அணியுடன் அவுஸ்திரேலியஅணி மோதும் பிரமாண்டமான 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டியும் 6 நாட்களைக் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டியும் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக அணிக்கு வீரர்களை தெரிவு செய்யும் குழுவில் முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்ஆர்தர்டன் அங்கம் வகிக்கிறார் அவருடன் குழுவின் தலைவராக சுனில் கவஸ்காரும் சேர் றிச்சர்ட்ஹாடலி,அரவிந்த டிசில்வா, கிளைவ் லொயிட், ஜொன்டி றோட்ஸ் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். ஒக்ரோபரில் நடைபெறும் போட்டி ஆரம்பப் போட்டியாகும். என்றும் இது போன்று மேலும் போட்டித் தொடர்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் உலக அணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்வது கடினமான காரியம் என்று ஐ.சி.சி தலைவர் மல்கம் ஸ்பீட் தெரிவிக்கிறார். எனினும் ஆர்தடன் 581 டெஸ்ட்போட்டிகளிலும் 917 ஒரு நாள் போட்டிகளிலும் ஆடிய அனுபவவீரர் என்றும் கூறியுள்ளார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வீரேந்தர்செவாக்கையும் ஸ்ரோர்சையும் தேர்ந்தெடுப்பதா அல்லது கிப்ஸையும் ஜயசூரியாவையும் தெரிவு செய்வதா என்பது வியப்பானதாக இருக்கும்.


அதுபோல இடைநிலைஆட்டக்காரர்களாக லாரா ராவிட்,டெண்டுகர், லக்ஸ்மன், கலிஸ்,பிளிண்ட்டொப் ஆகியோரையும் பந்து வீச்சில் முரளி, கும்ப்ளே ஆகிய சுழல் பந்து வீச்சாளர்களையும் வாஸ்ர அக்தார், ஹார்மிசன் நிட்டினி ஹோகாட், பதான் ஆகிய வேகப் பந்து வீச்சாளர்களில் யாரைத் தெரிவு செய்வது என்ற பிரச்சினைகளும் தோன்றியிருப்பதாக ஸ்பீட் கூறுகிறார்.

இத் தொடரிலிருந்து 1.4மில்லியன் ஸ்டேலிங்பவுண் கிடைக்கும் என்றும் இதற்கான நுழைவுச் சீட்டு பெரியோர்களுக்கு 19 பவுணாகவும் 4 பேர் அடங்கிய குடும்பத்துக்கு 47 பவுணாகவும் இருக்கும்.

இதேபோன்ற போட்டிகளை 1977-79 காலப்பகுதியில் அவுஸ்திரேலியா, மேற்கிந்திய வீரர்கள் அணிக்கும் உலக அணிக்குமிடையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் ஒக்ரோபர் 5,7,9, ஆம் திகதிகளில் மெல்பேர்னிலும் 14முதல் 19வரை சிட்னியில் டெஸ்ட் போட்டியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# தொடரைக்கைப்பற்ற வேண்டுமானால் வீரர்களுக்கு மனோ பலம் வேண்டும்



-கும்ளே

பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரைக் கைப்பற்ற இந்திய வீரர்களுக்கு மனோரீதியான பலம் தேவை என்று சுழற்பந்து வீச்சாளர் கும்ளே கூறியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றவர் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே, பாகிஸ்தான் அணியின் இந்தியப் பயணம் குறித்து கூறியதாவது,

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றால் ஒருநாள் போட்டித் தொடரையும் நம்மால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை தானாகவே வரும். முதலில் வீரர்களுக்கு மனோரீதியான பலம் தேவை. போட்டி தொடங்குவதற்கு முன்னதாக இந்த பலம் இந்திய வீரர்களிடம் வந்துவிட்டால் அது வெற்றிக்கு திறவுகோலாக அமையும். அப்படி மனோ ரீதியாவும் உடல் ரீதியாகவும் பலத்துடன் இருந்தால் தான் நம்மால் சிறப்பாக ஆடவும் முடியும் என்றார்.




# உலகக் கோப்பை பீச் கால்பந்து மே மாதம் பிரேசில் நாட்டில்

உலகக் கோப்பை பீச் கால்பந்துப் போட்டி முதன் முறையாக நடத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சர்வதேச கால் பந்து கூட்டமைப்பு (பீபா) செய்து வருகிறது.

ஐரோப்பா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் பீச் கால்பந்து விளையாடப்பட்டு வருகிறது. 28 மீற்றர் அகலம், 37 மீற்றர் நீளம் கொண்ட மணல் களத்தில் போட்டிகள் நடத்தப்படும். ஒரு அணியில் 5 வீரர்கள் இடம்பெற்று இருப்பார். 3 பகுதிகளாகப் போட்டி நடக்கும். இந்த பீச் கால்பந்துப் போட்டியை பிரபலப்படுத்தும் நோக்குடன் ஆண்டு தோறும் உலகக் கோப்பைத் தொடரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலாவது போட்டி வரும் மே மாதத்தில் பிரேசில் நாட்டில் நடக்கவுள்ளது.

இப்போட்டி குறித்து பீபா தலைவர் செப் பிளாட்டர் கூறுகையில்: "10 ஆண்டுகளுக்குமுன் உருவான பீச் கால்பந்து அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளது. முதலாவது உலகக் கோப்பைப் போட்டியில் 12 நாடுகள் பங்கேற்கவுள்ளன. வரும் காலங்களில் அதிகளவில் அணிகள் கலந்துகொள்ள வாய்ப்புள்ளது என்றார்.

# ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி இம்முறை பாகிஸ்தானில் நடைபெறும்

அடுத்த ஆசிய கிண்ணக்கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறும் என அந்நாட்டு கிரிக்கெட் சபைத்தலைவர் சகாரியா, கான் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று டுபாயிலுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். இந்தப் போட்டித்தொடரில் பங்கேற்க இந்தியா,சிறிலங்காபங்களாதேஷ்ஆகிய நாடுகள் இணங்கியிருப்பதாகவும் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளின் தெரிவுசெய்யும் போட்டிகளும் இங்கு நடைபெறும் எனவும் கான் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் நடைபெற்ற கடந்தவருடப்போட்டியில் ஹொங்கொங்,ஐ.அ.எமிரேட்ஸ் அணிகளும் பங்கேற்றன.

இதுவரை எட்டு ஆசிய கிண்ணப்போட்டிகள் நடைபெற்ற போதிலும், பாகிஸ்தான்னில் ஒரு போட்டியும் நடைபெறாமை குறிப்பிடத்தக்கது. இதற்கு அண்டை நாடான இந்தியாவுடனான அரசியல் பிணக்கே காரணமாகும்.

## வி.பி. முக்கோண கிரிக்கெட் இறுதிப்போட்டி நாளை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி.கிண்ணத்துக்கான முக்கோண கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி நாளை நடைபெறுகின்றது.

இவ் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து பாகிஸ்தான் அணிமோதவுள்ளது.

கடைசிஇரு லீக்போட்டிகளில் அசத்தலான வெற்றியைபெற்ற பாகிஸ்தான் கிண்ணத்தை கைப்பற்றும் உத்வேகத்திலுள்ளது.

இந்தநிலையில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்தியூஹெய்டன் சிறப்பாக விளையாடததால் அவருக்கு பதிலாக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக கில்கிறிஸ்டன், கிளார்க் களமிறங்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

மொத்தத்தில் இறுதிப்போட்டி பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எந்தவொரு தொடரிலும் இனிமேல் பங்கேற்கும் திட்டம் இல்லை



-ஹிங்கிஸ்

தொடர்ந்து பத்து மாதங்களாக தரவரிசையில் முதலாம் இடத்தைப் பிடித்து வைத்திருந்த டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ் இனி எந்த ஒரு தொடரிலும் பங்கேற்கும் திட்டம் தன்னிடம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தாய்லாந்து ஓபன் டென்னிசில் 1--6,6-2,6-2 என்ற கணக்கில் மார்லின் வெயின் காதரிடம் தோல்வி கண்ட பின்னர் இத்தகவலை வெளியிட்டார்.

24 வயதான சுவிஸ் வீராங்கனையான இவர்கிறாண்ஸ்லாம் போட்டி உட்பட 40 ஒற்றையர் ஆட்டத்திலும் 36 இரட்டையர் ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளார்.

## 7500 பேருக்கு அனுமதி

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை நேரில் பார்த்து ரசிக்க பாகிஸ்தான் ரசிகர்கள் 7500 பேருக்கு அனுமதி பற்றுசீட்டுக்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இந்தியா- பாகிஸ்தான் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டிமொகாலியில் நடக்கிறது.


# சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ பூநகரியில் கால்பந்து,மென்பந்து போட்டிகள்

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்கென பூநகரி பிரதேச விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினரால் மா்பெரும் உதைபந்தாட்ட, மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடாத்தப் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் ஒரு கழகத்திலிருந்து இரு அணிகள் பங்குபற்றலாமெனவும், இதற்கான விண்ணப்பங்களை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாமெனவும், விண்ணப்ப முடிவுத் திகதி 10-02-2005 என பூநகரி பிரதேச விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

(சோ)

## சிந்தனைக்கு



நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே தேசிய சக்தியாக - அணிதிரண்டு,எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சர்வதேசம் தமிழருக்கு உதவுவதைத் தடுக்க....

“சுனாமி அனர்த்த நிவாரணப் பணி என்ற பெயரில் சில வெளிநாடுகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சிறிலங்காவிற்குள் ஊடுருவி விடுதலைப்புலிகளுக்கு இராணுவ உதவிகளைப் புரிந்து வருவதால் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் வெளிநாடுகள் மற்றும் அவர்களது பணி குறித்து உடன் விசாரணை செய்யப்படவேண்டும்” எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஜே.வி.பி. விடுத்துள்ள கோரிக்கையானது ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல. ஆயினும், எதிர்கால அரசியலை இலக்காகக் கொண்டதாகும்.

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் ஜே.வி.பியின் இந்நிலைப்பாடு வழமையானதுபோல் ஆகிவிட்டது. அதாவது, சுனாமியினால் ஏற்பட்ட அழிவிற்கான நிவாரணமாகட்டும், யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கான நிவாரணம் ஆகட்டும் தமிழ் மக்கள் கைகளில் அவை சென்றுசேருவதை அனுமதிக்கும் நிலையில் ஜே.வி.பியினர் இல்லை. இத்தகைய நிலையில், தற்பொழுது கிட்டும் மிகச் சிறிய அளவிலான உதவிகள்கூட தமிழ் மக்களைச் சென்றடைவதைத் தடை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் புனர்நிர்மாணப் பணிகளுக்காகப் பெரியளவிலான நிதிகள் சென்று சேருவதைத் தடை செய்வதே ஜே.வி.பியின் நோக்கமாகும்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளுக்கும் பாதிப்புக்களுக்கு ஏற்ற வகையில் தமது நிவாரண உதவிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே இலங்கைக்கு உதவி வழங்கிய அநேக நாடுகளின் எதிர்பார்க்கை ஆகும். இது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அவை வலியுறுத்திக் கூறவும் தவறவில்லை.

இதேசமயம், சில மேற்கு நாடுகள் தம்மால் வழங்கப்படும் நிதி உதவிகள் வடக்கு-கிழக்கிற்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா என்பது குறித்து தமது அவதானிப்புக்கள் இருக்கும் எனவும் தெரிவித் துள்ளன. இதேவேளை, ஐ.நா. சபை, உலக வங்கி போன்ற அமைப் புக்கள் வழங்கப்படும் நிதி உரிய முறைகளில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது குறித்து கண்காணிக்கவும், கணக்கறிக்கைகளைப் பரிசீலிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டும் உள்ளன.

இன்னொரு புறத்தில், சில அரசாங்கங்கள் சுனாமி அனர்த்தத்திற்கென அறிவிக்கப்பட்ட நிதி உதவியின் ஒரு பகுதியை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கவே முன்வந்துள்ளன. உதவி வழங்கும் நாடுகளின் இத்தகைய நிலைப்பாடுகள் தமிழ் மக்களுக்கும் சிறிதளவேனும் சர்வதேச நிதியுதவிகள் சென்றடைந்துவிடுமோ என்ற சந்தேகத்தை ஜே.வி.பி.க்குத் தோற்றிவித்துள்ளது.

இவை யாவற்றிற்கும் மேலாக தற்பொழுது அரசாங்கம் சர்வதேச நாடுகளின் நிதியுதவிகளைப் பயன்படுத்துவது குறித்து ஒரு பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து அரச, புலிகள் சமாதானச் செயலகங்கள் ஊடாக விடுதலைப்புலிகளுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் ஜே.வி.பி.க்கு மேலும் சினத்தைத் தோற்றுவிப்பதாகியுள்ளது. ஏனெனில், இதன் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் நிதி விடுதலைப்புலிகளுக்கும் பங்கிடப்பட வேண்டிய தேவை, காட்டாயம் உருவாகிவிடும் என்ற அச்சத்தை ஜே.வி.பிக்கு ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, இவ்விடயத்தில் சந்திரிகா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஏற்படுமானால், இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளிலும் முன்னேற்றம் காணக்கூடியதொரு சூழ்நிலையும் உருவாகலாம் எனவும் ஜே.வி.பி. அச்சமடைந்துள்ளது. அத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் தமது இனவாத அரசியல் பாதிப்பிற்குள்ளாகவும் அது தமது எதிர்கால அரசியலைப் பாதிக்கவும் கூடும் என அது அச்சம் கொண்டுள்ளது.இத்தகையதொரு நிலையில்தான் தமிழ் மக்களுக்குச் சர்வதேச நிதியுதவிகள் எவையும் கிட்டிவிடாது தடுக்கும் வகையிலும் அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நிதியுதவிகள் பயன்பாடு குறித்த பேச்சுக்களில் முன்னேற்றம் காண முடியாத வகையிலும் தடைகளை உருவாகும் வகையில் ஜே.வி.பி. சர்வதேச நாடுகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடு குறித்து விசாரணைக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை மூலம், அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகளில் முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிக்க முடியும். ஏற்கனவே அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் - குறிப்பாக, கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வந்திறங்கும் நிவாரணப் பொருட்கள் மீதான சுங்கப் பரிசோதனை உட்பட்ட கெடுபிடிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணப் பணிகளைப் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது. இதனை மேலும் தீவிரமாக்கச் செய்வதன் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை பெருமளவில் முடக்கிவிட ஜே.வி.பி. முற்பட்டு நிற்கின்றது.

இதேபோன்று அரசு சிறிதளவேனும் தமிழருக்கு நேரடியாக வழங்கிய உதவிகள் தொடர்ந்தும் இடம்பெறாது தடுத்துவிடும் நோக்கிலேயே தற்பொழுது ஜே.வி.பி. குரல் எழுப்பத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே மனிதாபிமான உதவிகள் கூட இராணுவ உதவிகளாக மாற்றம் கண்டுள்ளது. ஆனால், ஜே.வி.பி யினரின் இந்நிலைப்பாடு புதிதானதும் அல்ல, எதிர்பார்க்க முடியாததுமல்ல.

ஏற்கனவே, டோக்கியோ மாநாட்டில் பெருந்தொகை நிதி உதவிகளை வழங்க உதவி வழங்குவோர் தயாரானபோதும் அதில் ஒரு பகுதி தமிழர் தாயகப்பகுதிக்குச் சென்றடைந்துவிடும் என்ற காரணத்தினாலேயே ஜே.வி.பி. அதற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியது. தற்பொழுதும் அவசர நிவாரண உதவிகள் யாவும் கிடைக்கப்பெற்று, உடனடி நிவாரணப்பணிகள் யாவும் தெற்கில் பூர்த்தியானதும் உதவிகள் வடக்கு-கிழக்கிற்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில், சர்வதேச உதவி தொடர்பான சர்ச்சையை அது தோற்றுவித்து வருகின்றது.

ஜே.வி.பியின் இன்றைய நிலைப்பாட்டின்படி, ஏகாதிபத்தியமோ, வெள்ளைத்தோலோ என்ற பேச்சுக்கள் எல்லாம் இல்லை. சர்வதேச உதவிகள் வேண்டாம், எங்கள் கால்களில் நாங்கள் நிற்போம் என்ற குரலும் இல்லை. தற்பொழுது அவர்களின் குரல் தமிழரின் கைகளில் சர்வதேச நிதியுதவிகள் சென்றடையக்கூடாது என்பதும், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சூழ்நிலையை சுனாமி அனர்த்தம் உருவாக்கிவிடக்கூடாது என்பதுமே.

# சுதந்திரச் சிறகு கொய்யப்பட்ட நாம் எவ்வாறு சுதந்திர தினத்தில் மகிழ்வது?

## -தமிழ் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சுதந்திரச் சிறகு கொய்யப்பட்ட நாம் எப்படி சுதந்திர தினத்தில் மகிழ்வது? இந்தச் சுதந்திர தினம் தமிழருக்குமான சுதந்திர தினமாக மாறும் வரை எமது நிலத்திலும் மனத்திலும் துக்க தினமாகவே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என “ சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்போம் ” என்ற தலைப்பில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சுதந்திரச் சிறகு கொய்யப்பட்ட நாம் எப்படி சுதந்திர தினத்தில் மகிழ்வது? 1948 ஆம் ஆண்டு இதே தினத்தில் வழங்கப்பட்ட இலங்கைக்கான சுதந்திரத்தை சிங்களவர் தமது இனத்துக்கென்று மாற்றினர். அன்று தொடக்கம் தேசிய இனத்திற்கான சகல சாத்தியப் பாடுகளையும் கொண்டிருந்ததான தமிழ் இனம் சிறுபான்மை முத்திரை குற்றப்பட்டு சுயநிர்ணய உரிமைகள் அபிலாசைகள், வாழ்வியல் பக்கங்கள் ஆகிய அனைத்து வழிகளிலும் நசுக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு தேசிய இனத்தின் சுதந்திரம் களவாடப்படுவதை அறிந்து பல தடவைகள் வார்த்தைகளினூடாகப் போராடியும் பயனற்றுப்போனது 1956 இல் ஆட்சிபீடம் ஏறிய அரசு சிங்கள இனமே இலங்கையின் தனியொரு இனம் என்பதை நிலைநிறுத்த அரச கருமமொழிகளில் தமிழ் மொழி நீக்கப்பட்டு சிங்கள மொழியின் தனிச்சட்டத்தைக் கொண்டு வந்தது. இதனூடாக தமிழினத்தின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களும், ஒப்பந்தங்களும் பயனற்றுப் போயின. இந்த நிலையில் தமிழ் இனம் தமக்கென்றொரு நிலம், மொழி, பண்பாடு, மக்கள் ஆகியவற்றைக் கொண்ட தனி அரசிற்கான கட்டமைப்பைக் கொண்டது என்பது உணரப்பட்டது. தனியரசிற்கான கட்டமைப்பைக் கொண்ட தமிழினத்தின் தலை நிமிர்விற்கு இரத்தம் சிந்திப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில்தான் ஆற்றல், ஆளுமை,வீரம், துணிவு, தியாகம் முதலான பண்புகளைக் கொண்ட தலைமை தமிழினத்திற்குக் கிடைத்தது. 1972ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தலைமையிலான விடுதலை இயக்கத் தின் தோற்றமும், ஆயுதப் போராட்டமும் தமிழ் இனத்தின் சுதந்திரப் பாதைகளையும் மக்கள் மீதான விடுதலை வேட்கையையும் திறக்கச் செய்தன. அன்றிலிருந்து விடுதலைப்புலிகளின் சுடுகுழல்களில் இருந்து புறப்பட்ட குண்டு ஒவ்வொன்றும் இனவாத இருட்டைப் பிளந்ததோடு தமிழினத்தின் விடுதலை வெளிச்சத்தைப் பரப்பி நின்றது. இத்தகைய நிலைக்குக் காரணம் சிங்களத் தலைமைகளும், மறுக்கப்பட்ட சுதந்திரமும் தான். இன்று வரை எமது சுதந்திரப் போராட்டம் தொடர்ந்த நிலையில் வல்லாதிக்க சக்திகளால் கூட அழிக்க முடியாத பலமும் ஆளுமையும் மிக்கதாக வளர்ச்சிப்படிகளில் நின்றபடி நிச்சயமான சுதந்திரத்தின் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதே தவிர இன்னும் முழுமையான சுதந்திரத்தைப் பெறவில்லை இத்தகைய நிலையில் சிங்கள அரசு சமாதானப் போர்வையினை போர்த்தியபடி எமது நிலமெங்கும் துப்பாக்கி தாங்கிய இராணுவத்தையும், முள்ளு வேலிகளையும் அமைத்தபடி எமது குடியிருப்புப் பிரதேசங்களை எமக்கு மீண்டும் கையளிக்க விரும்பாதபடி எமது போராட்டத்திற்கு முகங்கொடுக்கும் பலம் இல்லாதபடி இப்படியே பலபடிகளில் சிக்கித் தவிக்கிறது. எனினும் எமது சுதந்திரத்தை எமக்குத் தர விரும்பாதபடியே அரசு இருக்கிறது. இந்த சமாதான காலத்தின் தீர்விற்கான முன்னெடுப்புக்களில் அக்கறை காட்டாது மீண்டும் ஒரு யுத்தத்திற்கான முன்னெடுப்புக்களிலேயே அக்கறை காட்டுகிறது. எனவே இந்த சுதந்திர தினம் தமிழருக்குமான சுதந்திர தினமாக மாறும்வரை எமது நிலத்திலும் மனத்திலும் துக்கதினமாகவே அனுஷ்டிக்கப்பட வேண்டும். எமது நிலம் முழுவதிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு இந்த சுதந்திரதினத்தை நிராகரிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (சோ)

# அரசிலிருந்து ஜே.வி.பி. விலகினால் அரசுக்கு ஆதரவளிக்க எமது கட்சி தயார்

## -ஐ.தே.க.பா.உ.ராஜித சேனாரட்ன அறிவிப்பு

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. வெளியேறினால் அரசாங்கத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கும். ஆனால் அதிகாரம் தேவைப்படும் ஜே.வி.பி. ஒரு போதும் அரசிலிருந்து விலகாது என ஐ.தே.க.தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் 15 அம்சத்திட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் ஐக்கிய தேசியக்கட்சி முக்கியஸ்தர் ராஜித சேனாரட்ன இதனைத் வெளியிட்டுள்ளார். அரசாங்கத்திற்கான ஐக்கிய தேசியக கட்சியின், இந்த ஆதரவானது வெறுமனே அமைச்சுப் பதவிகளை நோக்கமாகக் கொண்டதல்ல என்றும் இது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தமது கட்சி வழங்கும் பங்களிப்பாகும் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி ஒரு போதும் விலகப் போவதில்லை. ஜே.வி.பி.யினருக்கு தற்போது அதிகாரம் தேவை எனவே அரசிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் ஜே.வி.பி. ஒருபோதும் விலகாது. அரசாங்கத்தை மிரட்டி பணியவைக்கும் நடவடிக்கைகளிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என்று ராஜித சேனாரட்ன குறிப்பிட்டார்.

# சுனாமியால் அ.அ.இழந்தோருக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை

## -கடவுச்சீட்டை மீளப்பெற தண்டம் இல்லை

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆள் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் இதன்படி அடையாள அட்டைகளுக்கான புகைப்படங்கள் மற்றும் ஏனைய செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும் எனவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் கடவுச்சீட்டுகள் காணாமல் போயிருந்தால் அதற்கான தண்டமாக அறவிடப்படும் 10 ஆயிரம் ரூபா அறவிடப்படாமல் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர்,சுனாமியின் காரணமாக மரணமானவர்களுக்காக அவர்களின் உறவினர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார். ஏற்கனவே சமூக சேவைகள் அமைச்சினால் இந்தத் தொகை 10 ஆயிரம் ரூபா என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் இது 15 ஆயிரம் ரூபாவாகவே வழங்கப்படுகிறது.

எனவே 10 ஆயிரம் ரூபாவை மாத்திரம் பெற்றவர்கள் மேலும் ஐயாயிரம் ரூபாவை பெறத் தகுதியுடையவர்களாவர். மரணமானவர்கள் தொடர்பில் மரண சான்றிதழ்கள் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுவதால் கிராமசேவகர், சமூக சேவை அதிகாரி, திடீர மரண விசாரணை அதிகாரி ஆகியோரில் இருவர் உறுதிப்படுத்தினால் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் மரணமானவர்களுக்கு வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை பெற்றுக்கொண்டு 12 ஆயிரம் ரூபாவை வழங்கும் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் திலக ரணவிராஜா தெரிவித்தார்.

# அரச,அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்

பாண்டியன் குளம் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் பாண்டியன் குள பிரதேச அரசியல்துறை செயலகத்தில் நாளை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் இந்த ஆண்டிற்கான வேலைத்திட்டம் சம்பந்தமாக விரிவாக ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாண்டியன் குளப் பிரதேசப் பொறுப்பாளர் சி.இலக்கியன் கேட்டுள்ளார். (19)

# இயல்பு நிலைக்குத் தடையாக உள்ளவை பற்றி யாழ்.இல் புலிகள்-படையினர் சந்திப்பில் பேச்சு

படைதரப்பு சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுமையான இயல்பு நிலையினை தோற்றுவிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்மென விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை போர் நிறுத்தக கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற படையினர்- புலிகளுக்கிடையேயான சந்திப்பின்போதே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சுக்கள் சுமார் இரண்டு மணி நேரத்திற்குமேலாக நீடித்தது.

விடுதலைப்புலிகள் தரப்பில் யாழ். மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணைஅரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் மற்றும் ஊடகப் பேச்சாளர் இமயவன், மானிப்பாய் கோட்ட பொறுப்பாளர் இன்பன்ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இராணுவத்தரப்பில் யாழ். மாவட்டபடைகளின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் சுனில் தென்னக்கோன் , காரைநகர் கடற்படைத்தளப் பொறுப்பதிகாரி வன்னியாராச்சி, காங்கேசன் துறை கடற்படைத்தளப் பொறுப்பதிகாரி வீரசிங்க மற்றும் வடபிராந்திய பிரதி பொலிஸ்மாஅதிபர் சி.வணகுரு ஆகியோர் கலந்து. கொண்டிருந்தனர்

இச்சந்திப்புத் தொடர்பாக ஊடகவியலாளர்களிடையே கருத்து வெளியிட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி " சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான இயல்பு வாழ்வினை கட்டியெழுப்புவதில் உள்ள தடைகளை அகற்றுவது தொடர்பாகவே கூடுதலாக உரையாடப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு சுமுகமான முறையில் இடம் பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (27,சு)

# கல்முனை வைத்தியசாலைச் சம்பவம் நால்வர் பொலிசாரால் கைது

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று நண்பகல் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் நால்வர் கைது செய்யப்பட்டு இருவர் நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய இருவரும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைக்கு உரிமை கோரும் தம்பதிகளான முருகுப் பிள்ளை ஜெயராஜா, அவரது மனைவி ஜூனித்தா ஜெயராஜா ஆகியோரே இன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்த னையின் பேரில் நேற்றிரவு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பிட்ட இருவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் எனப் பொலிசார் நீதிபதி கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் சமர்ப்பித்த அறிக்கையையடுத்தே இவர்களுக்குப்பிணை வழங்கப்பட்டது. குழந்தையை வைத்தியசாலைக்குச் சென்று பார்ப்பது என்றால் இருவர் மட்டும் தான் செல்லவேண்டும் என்றும் நீதிபதி இவர்களுக்குச் எச்சரிக்கையுடன் உத்தரவிட்டுள்ளார். வைத்தியசாலையில் சட்ட விரோதமாகக்கூடியது.அத்துமீறிப் பிரவேசித்தது, தாதியர்களை தாக்கியது, போன்ற குற்றச்சாட்டுக்கள் இந்த நால்வர் மீதும்பொலிசாரால் சுமத்தப்பட்டுள்ளன. ஏனைய சந்தேக நபர்களான சாமித்தம்பி ஸ்ரீஸ்கந்தராஜா ,தாமோதரம் பிரதீபன் ஆகியோரே எதிர் வரும் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

# சமாதான முயற்சிகளைப் பாதுகாக்க நோர்வேப் பிரதமரிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே பிரதமர் மைக்னோபொண்டவிக்குடன் நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியபோது இலங்கையில் சமாதான நடவடிக்கைகளைப் பாதுகாத்துக்கொண்டு அதனை முன்கொண்டு செல்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு நோர்வே சென்றிருந்த எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ நகரில் நேற்று முன்தினம் நோர்வேப் பிரதமரைச்சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவ முன்வந்தமைக்காக நேர்வேப் பிரதமருக்குதமது நன்றியையும் தெரிவித்துள்ளார்.அத்துடன் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திப் பணிக்கான அமைச்சர்ஹில்டி ஜோன்சனையும் சந்தித்துள்ளார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் ஆனந்தராஜா இடம்பெறக்கூடாது

## விடாப்பிடியாக நிற்கிறது ஜே.வி.பி

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் புதிய சர்ச்சைகள் தோன்றியுள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வின் உறுப்பினர்களாக முன்னாள் நீதிபதிகளான அமிர் இஸ்மாயில், எதிசூரிய ஆகியோரும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களை அரசியல் அமைப்பு சபை சனாதிபதிக்கு பரிந்துரை செய்திருந்தது. இந்த ஆணைக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள முன்னாள்

பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா விற்கும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முக்கியஸ்தர் ஒருவருக்கும்இடையில் நெருக்கமான தொடர்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் ஜே.வி.பி யினர் மீண்டும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

விருந்துபசரா நிகழ்வின் போது ரீ.ஈ.ஆனந்தராஜாவும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய நபரும் ஒன்றாக இருப்பதுபோல்பிடிக்கப்பட்ட புகைப்படம் ஒன்றைக் கொண்டு ஆனந்தராஜாவை இவர்கள் பதவி நீக்கம் செய்தமை குறிப்பிடத்தக்கது.இப்பொழுது மீண்டும் அதே குற்றச்சாட்டை முன்னிறுத்தி

ஆனந்தராஜாவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்கவேண்டாம் என ஜே.வி.பிதரப்பு சனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைக்கென ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தேங்கிக்கிடப்பதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

# எதிர்க்கட்சித்தலைவர் ரணில் பெல்ஜியத்திற்கு விஜயம்

சிறிலங்கா எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குழுவினர் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் புறெசல் சென்றடைந்தனர். அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் இரண்டு நாட்கள் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபடுவார்கள் என்றும் இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள் எனவும் இந்தச் சந்திப்புகளும் நோர்வேயில் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பாகவே இருக்கும் என்றும் இலங்கையின் அரசியல் மாற்றங்களும் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## சிறிலங்காவின்..

நாளாகக்கழித்து உங்கள் எதிர்ப்பைத் துக்க தினமாக வெளிக்காட்ட வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் யாழ் . மாவட்ட தமிழர் மாணவர் ஒன்றியம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உட்படப் பல்வேறு அமைப்புக்களும் கோரியுள்ளன. இதேநேரம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் வலி வடக்கு பிரதேச செயலகத்தில் நாளைய தினம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (27,36,சு,14)

## சுனாமி அனர்த்த

செய்தியாளர் தெரிவித்துள்ளார்.கிளின்டனின் நியமனம் குறித்த ஐ.நா.வின் அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆழிப் பேரலையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளில் மீள் கட்டுமானப் பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்கு ஐ.நாவின் விசேட தூதுவராக கிளின்டனை நியமிக்க எண்ணியுள்ள அனான் இந்த இரு நாடுகளிலும் அரசுக்கும் விடுதலை அமைப்புக்களுக்கும் இடையில் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் சச்சரவுகளுக்கான தீர்வுக்கும் கிளின்டன் உதவவேண்டும் எனக்கருதுகிறார்என்று ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தோனேஷியாவிலும்,இலங்கையிலும் சுதந்திரத்துக்காக இரு தசாப்தகாலத்துக்கு மேலாகப் போராடிவரும் இயக்கங்களுக்கும், அந்நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இடையில் பணியாற்றி, தனது அரசியல் முதிர்ச்சி மூலம் நல்ல பங்களிப்பை நல்கி தீர்வுக்காக உழைக்க கிளின்டனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று ஐ.நா வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## பாடசாலை

கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு:-இ.வியாசகன்(10 வயது), இ.பிரியகன்(07வயது), யோ. நிதர்ஷன்(10 வயது), ஆர். தேனுஜா (08 வயது), ப. பவித்திரா(08 வயது) எஸ்.சிவரஞ்சனி(8வயது), க.ஜனுஜா(08 வயது), மற்றும் செ.டினோசா(08 வயது).(36,27)

## சுனாமி..

சங்கள் தவிர்ந்த புனரமைப்புக்ளுக்காக வடக்குப் பகுதிக்கு 19 வீதமும் கிழக்கு மாகாணத்துக்கு 45 வீதமும்-நிதிகள் தேவைப்படுகின்றன.தென்பகுதிக்கு 25.9 வீத நிதிகள் தேவைப்படுகின்றன

மேற்குப் பகுதிக்கு 10.1 வீத நிதிகள் தேவைப்படுகின்றன கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, மின்சாரம், நீர்,தொடருந்து மற்றும் சுற்றுலாத்துறை உட்பட்ட நிலையில் வடபகுதிக்கு 17.2 வீத நிதிகள் தேவைப்படுகின்றன. 41.1 வீத நிதிகள் கிழக்குக்குத் தேவைப்படுகின்றன.

29.1 வீத நிதிகள் தென் பகுதிக்கும், 12.6 வீத நிதிகள் மேற்குப் பகுதிக்கும் தேவைப்படுவதாக குறிப்பிட்ட அறிக்கையில சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதே வேளை இது தொடர்பாகக் கருத்துரைத்த உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரல்ட், சுனாமியின் காரணமாகப் பாரிய அளவான மக்கள் வறுமைக்குட்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது இன்று எதிர் நோக்கப்படும் பாரிய பிரச்சினையாகும்

அதேநேரம் சுனாமியின் பின்னர் ஏற்பட்டுள்ள நட்டங்களை ஈடுசெய்வதற்குச் சமமாக சமூகங்களுக்கு மத்தியில் உள்ள வேறுபாடுகளையும் களைந்து சமாதான முனைப்புக்குப் பாலம் அமைக்க வேண்டியதும் தற்போதுள்ள சவாலாகும்.எனவும் ஹரல்ட் குறிப்பிட்டுள்ளார். சுனாமியின் காரணமாக இலங்கையின் கல்வித் துறைக்கு 21பில்லியன் அமெரிக்க டொலர் அளவான நட்டம் ஏற்பட்டுள்ளது. இதன்கீழ் 168 பாடசாலைகள், நான்குபல்கலைக் கழகங்கள், 18 தொழில் பயிற்சிமையங்கள்எனபன சேதமடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சுனாமி அனர்த்தத்தின்..

இந்த குழந்தைக்கு பல பெற்றோர்கள் தமது குழந்தை என வைத்தியசாலை நிர்வாகத்திடம் உரிமை கோரியிருந்தனர். இருப்பினும் கல்முனையைச் சேர்ந்த ஜெயராஜா - ஜூனித்தா தம்பதிகள் இந்தக் குழந்தை தங்களுடைய குழந்தை அபிலாஸ் எனக் கூறி கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிசார் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தனர். கடந்த 12ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்ற போது குறிப்பிட்டதம்பதிகளிடம்பராமரிப்பிற்காகக் குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் கே.முருகானந்தம் மகப்பேற்று வைத்திய நிபுணர் எம்.முகுந்தன் ஆகியோர் நீதிபதியைச் சந்தித்து குழந்தையின் உடல் ஆரோக்கியம் கருதி தொடர்ந்து வைத்தியசாலைப் பராமரிப்பில் வைப்பதற்கு அனுமதி கேட்டனர். இதனையடுத்து குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலை பராமரிப்பில் இருந்து வருகிறது. நேற்றுக் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.பி.முகைதீன் முன்னிலையில் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பெற்றோர் எனக் கூறும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குழந்தைக்குப் பல பெற்றோர் உரிமை கோரியிருந்தாலும் சட்ட ரீதியாகக் குறிப்பிட்ட தம்பதிகளே உரிமை கோரியிருப்பதால் குழந்தையை அவர்களிடம் ஒப்படைக்குமாறு வாதிட்டனர். மகப்பேற்று வைத்திய நிபுணர்எம்.முகுந்தன் தமது சட்டத்தரணி ஊடாகசமர்ப்பித்த வாதத்தில் தற்போது ஆழிப்பேரலையினால் பல பெற்றோர்கள் தமது குழந்தைகளை இழந்துள் ளனர். எதிர்காலத்தில் மேலும் சிலர் இக் குழந்தைக்கு சட்ட ரீதியாக உரிமை கோர இடமுண்டு. இந்நிலையில் உரிமை கோருபவர்களையும் குழந்தையையும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலமே பெற்றோரை அடையாளம் காண முடியும் என்றார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி குழந்தையையும், அதற்கு உரிமை கோரும் பெற்றோரையும் மரபணுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். எதிர்காலத்தில் யாராவது உரிமை கோரினால் அவர்களையும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதுவரை குழந்தை வைத்தியசாலைப் பராமரிப்பில் இருக்க வேண்டும். உரிமை கோரும் பெற்றோர் வைத்தியசாலை சட்டதிட்டத்திற்கமைய பார்வையிட முடியும் என்றும், தனது உத்தரவில் குறிப்பிட்டு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். இதற்கிடையில் குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலைப் பராமரிப்பில் இருக்க வேண்டும்என நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, ஆத்திரமடைந்த உரிமை கோரும் தம்பதிகளும், அவர்களது உறவினர்களும் நீதிமன்றத்திற்கு வெளியே வந்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பினார்கள். அங்கிருந்து நேரடியாக வைத்திசாலைக்குள் அத்துமீறி நுழைந்து குழந்தையை எடுத்துச்செல்ல முற்பட்டார்கள். இதனால் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக வைத்தியசாலை அலுவல்கள் ஓரிரு மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டன. இதனையடுத்துப் பொலிசார் அங்கு வரவழைக்கப்பட்டு அனைவரும்வெளியேற்றப் பட்டனர். இவர்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கும், வைத்தியசாலை ஊழியர்கள் மீது தகாதவார்த்தைப் பிரயோகம் செய்தமைக்கும் எதிர்ப்பு தெரிவித்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட போதிலும் பின்பு நிலமை சுமுக நிலைக்குத் திரும்பியுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது